# அய்யா துணை

# அகிலத்திரட்டு அம்மானை

## இரண்டாம் பருவம் (SEMESTER 2)

## DAY 1

தண்டமிழுங் கன்னி சான்றோர்க ளானோர்க்குக்
கோட்டையு மிட்டுக் குமாரரையும் பெண்ணதையும்
தாட்டிமையாய் சான்றோர்க்குத் தரந்தரமே மாளிகையும்
வைத்துக் கொடுத்தாள் வாழ்ந்திருந்தார் சான்றோர்கள்
மெய்த்துப்புவி கொண்டாட மெல்லியர்கள் தங்களுக்கு
வயிற்றில் கெற்பமாகி மதலைபெற்றா ரம்மானை
நெய்த்தெளிய கன்னி நேரிழைமா ரெல்லோரும்
இப்படியே கன்னி எல்லோரும் நன்றாக
அப்படியே மதலைபெற்று அகமகிழ்ந்தா ரம்மானை
பாலருக்கு பாலர் பரிவாய் மிகவளர
சீலமுள்ள வித்தை சிறக்க அவர்வருத்தி
எமத்திறைவ ராக எங்கும் புகழ்ந்திடவே
சமர்த்த ரெனஅவர்கள் தலையெடுத்தா ரம்மானை
முத்து வியாபாரம் முதல்வியா பாரமுதல்
பத்தரை மாற்றுப் பசும்பொன்வியா பாரமுடன்
மாணிக்க வியாபாரம் வைவிரப்பொன் வியாபாரம்
ஆணிப்பொன் வியாபாரம் அழகுகச்சை வியாபாரம்
கப்பல் வியாபாரம் கறிமிளகு வியாபாரம்
ஒப்பமுள்ள வியாபாரம் ஒக்கமிகச் செய்தனராம்
தாலம தேறித் தைரியப் பால்வாங்கி
மேலுள்ள சான்றோர் மிகுதியா யாண்டிருந்தார்
நெய்த்தொழிலும் வில்தொழிலும் நெறடுவிதத் தொழிலும்
மெய்த்தொழில்கள் கற்று மேலோ ரெனவளர்ந்தார்
சோழ னதையறிந்து தெய்வச்சான்றோர்களுக்கு
வேழம்பல கொடுத்து மிகுகற்பமுங் கொடுத்து
நல்லமன்ன ரென்று நாடி மகிழ்ந்திருந்தார்
செல்லமன்ன ரான தெய்வச்சான் றோர்களுக்கு
அடிக்கல் லெழுதி ஆயிரம் பொன்கொடுத்து
முடிக்கு முடிச்சோழன் முத்துமுடியுங் கொடுத்து
வீர விருதுகளும் வேழம் பரிகொடுத்து
பாரமுள்ள சீமைதனில் பங்கு மிகக்கொடுத்து
சோழன் முடியும் துலங்க மிகக்கொடுத்து
ஆழமுள்ள சான்றோர் அரசாண்டா ரம்மானை
சோழனுட னெதிர்த்துச் சூது செய்த மன்னரையும்
வேழமுடி மன்னர் வெற்றிகொண் டாண்டிருந்தார்
வெட்டாத படையை வெட்டி விருதுபெற்று
அட்டாளத் தேசம் அடக்கியர சாண்டிருந்தார்

விளக்கம்:

## சான்றோர் மக்களின் வாழ்க்கை

மாகாளியிடம் வளர்ந்த சான்றோர் மக்களை மாகாளியம்மை வளர்த்து ஆளாக்கி அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்.மேலும் ஏழு சான்றோர் மக்களும் வாழுகின்ற வகையில் அவர்களுக்கு கோட்டையும் அமைத்து தரந்தரமாக மாளிகையும் ஒவ்வொரு சான்றோர் மக்களும், வாழ்வதற்கு ஏற்ற அரங்குகளை எல்லாம் அமைத்து வைத்துக் கொடுத்தார்கள். அப்போது அந்த சான்றோர் மக்களுடைய மனைவிமார்கள் வயிற்றில் கெற்பமாகி குழந்தைகளை பெற்றெடுத்து சிறப்பாக வாழ்ந்து வந்தார்கள்.

அப்படி வாழ்ந்து வருகின்ற அந்த நேரத்திலே பாலருக்கு பரிவாய் குழந்தை மிக வளர்ந்து வருகின்ற நேரத்தில் சான்றோர் மக்களின் புகழ் பெருமை எல்லாம் தேசங்களிலும் பெருமை போற்றி புகழப்பட்டது, எல்லா நாட்டு மன்னர்களும் இந்த சான்றோர் மக்களின் திறமைக்கு அங்கீகாரம் அளித்து போற்றி பாராட்டி சிறப்பு செய்தார்கள். சான்றோர் மக்களின் புகழ் உலகெங்கும் தெரிய வந்தது. மேலும் அவர்கள் பலவிதமான வியாபாரம் மற்றும் தொழில்களை செய்து வந்தார்கள்.

சான்றோர் மக்கள் பலவிதமான வியாபாரங்களை செய்தார்கள். முத்து வியாபாரம் ,முதல் (தொழில் நடத்த பண உதவி செய்வது) வியாபாரம், பத்தரை மாற்று வியாபாரம் ,பழ வியாபாரம், மாணிக்க வியாபாரம், வைர வியாபாரம், பொன் வியாபாரம், அழகு சாதன பொருட்கள் வியாபாரம், கப்பல் வியாபாரம், கறிமிளகு வியாபாரம்,இப்படி பலவகையான வியாபாரங்களை எல்லாம் செய்து வந்தனர்.

: மேலும் சான்றோர் மக்கள் பனையேறும் தொழில் செய்து அந்த பனையில் இருந்து கிடைக்கும் பொருட்களை வைத்து பலவிதமான வியாபாரம் தொழில்களையும் நடத்தி வந்தார்கள். பத நீரில் இருந்து பல வித உணவு பொருட்களை தயாரித்து அதன் மூலம் பொருள் ஈட்டினார்கள். இப்படி பல வியாபாரங்களையும் செய்து வந்தார்கள்.

மேலும் சான்றோர் மக்கள் பலவிதமான தொழில்களையும் கற்று அறிந்திருந்தார்கள். கைத்தொழில் நெசவுத் தொழில், வில் தொழில், நெறடு விதமான தொழில்களையும்,மெய் தொழில் என்று சொல்லக்கூடிய இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகளை கற்றுணர்ந்து, தாங்கள் கற்றதை பிறருக்கு கற்றுக் கொடுத்தும் மேலோன் என வாழ்ந்து வந்தார்கள். இதை அறிந்த சோழ மன்னன் சான்றோர் மக்களுக்கு பல விருதுகளையும் பரிசுகளையும் கொடுத்து சிறப்பு செய்தான்.

மேலும் கற்பகவிருட்ஷமாகிய பனைமரத்தில் ஏறி பதநீர் எடுத்து அமிர்தப் பாலைக்குடித்து ஆரோக்கியத்தோடு இருந்தார்கள். மேலும் பலவிதமானத் தொழில்களையெல்லாம் கற்று பார்புகழும் வண்ணம் வாழ்ந்து வந்தார்கள். சான்றோர்களின் சிறப்பை அறிந்தச் சோழ மன்னன் பெரியப் பரிசுப்பொருட்களையும் கொடுத்து, "நல்ல மன்னர்" என்றப் பட்டத்தையும் கொடுத்துச் சிறப்பித்தான்.

சோழமன்னன் சான்றோர் மக்களுக்கு யானைப்படை குதிரைப்படை போன்ற படைகளையும் அணி வகுத்து கொடுத்து மிகுந்த கப்பம் என்று

சொல்லக் கூடிய திறைப்பொருளையும் கொடுத்து நல்ல மன்னர் என்று வாழ்த்தினார்கள். தாங்கள் ஆட்சி செய்கின்ற பகுதிகளில் சில பகுதிகளை நீங்கள் ஆண்டு வாருங்கள் என்று சொல்லி அங்கே எல்லைகளைக் குறிப்பிட்டு கொடுத்து ஆண்டு வாருங்கள் என்று கூறிச் சிறப்பு செய்தார்கள். பொன் காசு பணங்களை எல்லாம் கொடுத்து சோழமன்னன் சிறப்பித்தோடு பல விருதுகளையும் தங்களுடைய சீமையிலே பங்கு மிக கொடுத்து அரசாட்சி செய்ய வைத்தார்கள்.

இப்படி சோழ மன்னர்களை எதிர்த்து வந்தவர்களை எல்லாம் சான்றோர் மக்கள் அழித்து வெற்றி கொண்டு தங்களை யாரும் எதிர்க்க முடியாது என்ற ஒரு நிலையில் வீரத்தோடு எல்லா நேசத்தையும் ஆண்டிருந்தார்கள்.

*******

## DAY 2

இப்படியே சான்றோர் இராச்சியத்தை யாண்டிருக்க
அப்படியே சீமை அவர்க்குள்ளே யாக்கிவைத்துத்
தர்மமுடன் பூமி தானாண் டிருக்கையிலே
வர்மம் வந்தளுாயம் வகுக்கக்கே ளொண்ணுதலே

### கலியன் பிறப்பு

சீரங்க மானதிலே சீரங்க நாதருந்தான்
பாரெங்கு மெய்க்கப் பள்ளிகொண் டிருக்கையிலே
நாட்டுக்குக் கேடு நாட்பிடித்த செய்திதன்னை
கூட்டுக் கிளியே கூர்மையுடனே கேளு
முன்னே குறோணி முடிந்ததுண்ட மாறதிலே
அன்னேகே ளஞ்சுதுண்டம் அவனி தனிலேபிறந்து
ஆதி தனைநினைத்து ஆளாம லவ்வுயிர்கள்
நீதிகெட்ட மோச நீசனைப்போல் தானாகி
முப்பிறவி யோடாறும் முதலோனைப் போற்றாமல்
அப்பிறவி யாறும் அழித்ததின்மே லாயிழையே
குருமுனிவ னான கூர்மையுள்ள மாமுனிவன்
அருமுனிவ னான ஆதிமுனி யைநோக்கி
சிவனெனவே போற்றிச் சொல்லுவான் மாமுனிவன்
தவமே தவப்பொருளே தாண்டவசங் காரவனே

### விருத்தம்

முன்னே பிறந்த குறோணிதனை மூவிரண் டாக வுடல்பிளந்து
தன்னே உயிரோ டஞ்சுசெய்து சுவாமி தனைநினை யாததினால்
வன்னத் திருமால் கொலையடக்கி வந்தார் சடல மிழந்துகுண்டம்
இன்னம் பிறப்பொன்றுண்டல்லவோ இறந்த குறோணி யவன்தனக்கே

வாசமுள்ள நேசா மற்றொப்பில் லாதவனே
ஈசனே நானுமொன்று இயம்புகிறேன் கேளுமையா
குறோணி யவனுடலைக் கூர்மையுட னேபிளந்து
சுறோணித மாயன் தொல்புவியில் விட்டெறிய
அஞ்சுதர முயிர் அவனிதனி லேபிறந்து
பிஞ்சுமதி சூடும் பிஞ்ஞகனைப் போற்றாமல்
மாயனையு மெண்ணாமல் மதமா யிருந்ததினால்
ஆயனந்தச் சூரரையும் அழித்தார்கா ணீசுரரே
முச்சூர னோடாறு யுகமு முயிரழித்து
அச்சூரக் குடும்பம் அறுத்தந்த மாயவரும்
கொண்டிருந்த பொய்ச்சடலக் கூட்டை மிகக்களைந்து
ஆண்டிருந்த குண்டம் அவரடைந்தா ரம்மானை
முச்சூரன் துண்டம் ஒன்றுண்டு ஈசுரரே
அச்சூரன் பிறவி ஆறென் றீரரையாவே
ஆறாம் யுகத்தில் அமையுமென்று மாமுனியும்
வீறாக ஈசுரரை விண்ணப்பஞ் செய்துநின்றான்
நல்லதுதா னென்று நாட்டமுற்று ஈசுரரும்
வல்லவனே மாமுனியே மாயன்வர வேண்டாமோ
என்றுநல்ல ஈசர் இயம்ப முனி யேதுசொல்வான்
நன்றுகாண் மாயவர்க்கு நாலுரண்டோ ராம்பிறவி
பிறக்கத் தவசு புரியப்போய்க் கீழுலகில்
உறக்க மெய்ஞ்ஞான ஒளியிருக்கி றாரெனவே
தேவமுனி சொல்ல சிவனா ரகமகிழ்ந்து
கோவுகத்தி லுள்ள குருவசிஷ்டர் தங்களையும்
தெய்வலோ கத்திலுள்ள தேவரை யும்வருத்தி
வைந்தலோ கத்திலுள்ள வாய்த்ததர்மி தங்களையும்
கிணநாதர் கிம்புருடர் கிங்கிலியரை யும்வருத்தி
இணையாக மேலோகத்து எல்லோரை யும்வருத்தி
சத்தி மறையும் சாஸ்திரத்தை யும்வருத்தி
அத்தி முகவனையும் ஆனவ கும்பனையும்
சங்கமறையை வருத்தித் தான்கேட்பா ரீசுரரும்
இங்குண்டோ மாலும் எங்கிருப்ப துண்டனவே
எல்லோ ருங்கூடி இதமித்துச் சொல்லுமென்றார்
அல்லோ ருங்கேட்க அரன்சொன்னா ரம்மானை
வேழமொத்த தேவரெல்லாம் மேகவண்ண ரிங்கேயில்லை
கீழுலகில் மாண்டு கிடக்கிறா ரென்றுசொல்லி
ஒன்பதாம் பிறவி ஒடுங்கி யவர்பிறக்க
இன்பமறக் கீழுலகில் இறந்துகிடக்கி றாரெனவே
எல்லோருஞ் சொல்ல ஈசுரரும் நல்லதென்று
அல்லோருங் கேட்க அவரேது பின்சொல்லுவார்
முன்னே பிறந்த முண்டசுரன் தன்னுயிரைத்
தன்னோ டாறுபிறவி தான்செய்தோ மசுரரென
ஆறு பிறவியிலும் அசுரரென வேபிறந்து
வீறுடனே நம்மை விரும்பவும்நாம் கண்டிலமே
இப்போ தவன்தனக்கு ஏழாம் பிறவியிது

அப்போதும் நம்மை அவன்நினை யாதிருந்தால்
இல்லை மேற்பிறவி இறப்புமுடி வாகுமல்லோ
நல்ல பிறவியதாய் நமைத்துதிக்கப் புத்தியதும்
அழகு சவுந்தரியம் அலங்கார மெய்யறிவும்
குழவு மிகப்புத்தி கூர்மையலங் காரமுடன்
மேலு மாலாறு முடத்த யுகங்களுக்கு
நாலுமுழ மொன்றுதலை நல்லோ ரசுரர்களை
கொன்றுதா னவ்வசுரர் கூறுதற்குச் சொல்லுமுண்டோ
இன்னமிந்த மாயன் எடுத்த வுருப்போலே
படைத்துநாம் வைத்தால் பகருமொழி வேறில்லையே
நடத்துவ தேதெனவே நவிலுமென்றார் தேவர்களை
அப்போது தேவர்களும் ஆனமறை வேதியரும்
எப்போது மிறவாது ருக்கும் முனிவர்களும்
நல்லதுதா னென்று நாடி யகமகிழ்ந்து
வல்லப் பிறவி வகுக்கத் துணிந்தனராம்
பிறவி வகுக்கவென்று பெரியோ னகமகிழ்ந்து
திறவி முதலோன் தெளிந்துநிற்கும் வேளையிலே
துண்டமது பிண்டமதைத் துளைத்துக்கால் மேல்நீட்டி
மண்டைகீழ் கால்மேலாய் வந்துதித்தா னம்மானை
எல்லோருங் கண்டு இதுகண் மாயமெனவே
அல்லோரும் வந்து ஆதியோ டேவுரைத்தார்
உடனே சிவமும் உள்ள மிகக்களித்து
இடமே தான்பேர்ந்து எழுந்தருளி ஈசுரரும்
அதிசயத்தைப் பார்ப்போமென்று அவரேகும் வேளையிலே
எதிராக நின்றுநந்தி ஏதுரைப்பா ரம்மானை
மூவர்களுந் தேவர்களும் மூர்த்திகளுங் காணாத
தேவரீ ரெழுந்தருளி திசைநோக்கி வந்ததென்ன
அப்போது நந்தியுடன் ஆதி மிகவுரைப்பார்
இப்போ தோரற்புதமாய் இருக்குதென்றா ரெல்லோரும்
வானோக்கிக் காலும் மலர்நோக்கிச் சிரசும்
தானமது மாறி தலைகீழாய் நிற்பதுவும்
பார்த்துவர லாமெனவே பையநடை கொண்டேனென்றார்
சாற்றுமொழி கேட்டுநந்தி தானுரைப்பா ரம்மானை
அங்கல்லத் தானம் அழிந்ததுகா ணீசுரரே
இங்கு நான்கண்டேன் எழுந்தருளி வந்ததினால்
தலந்தா னிளகி தான்வந்த தாலேதான்
குலந்தா னழியும் குசல்பிறக்கும் ராச்சியத்தில்
வரம்பழியு மாரி மனுநீதங் குன்றுமையா
பரம்பெரிய வேதம் பழுதுவருங் கண்டீரே
என்றந்த மாமுனியும் ஈசுரரை யுங்கூட்டி
குன்றுபொன் னான கிரிமேவித் தானிருந்தார்.

விளக்கம்:

சோழ மன்னன் சான்றோர்களுக்கு யானைப்படைகளைக் கொடுத்து அவர்களைக் கவுரவப்படுத்தி ஆண்டுவந்தான். சான்றோர்களும் பிறருக்கு

துன்பம் செய்து மன்னர்களால் அடக்க முடியாமல் இருந்த மன்னர்களை எல்லாம் அடிப்பணியச் செய்து அரசுபுரிந்தார்கள். சான்றோர்களுடைய திறமைக்குக் கட்டுப்பட்டு எல்லா நாடுகளைச் சார்ந்தவர்களும் நேர்மையாக வாழ்ந்து வந்தார்கள். தருமநெறி தவறாது மக்கள் பண்போடு வாழ்ந்து வரும் நாளில் எதிரியாக பூலோகத்தில் கலியன் தோன்றினான்.

எப்படி என்றால் ,நாராயணர் துவாபர யுகம் நிறைவேற்றி விட்டு ஸ்ரீரங்கத்தில் பள்ளிக்கொண்டு இருக்கும்போது, நாட்டிற்கு எப்படிக்கேடு வந்தது என்பதனை நாராயண மூர்த்தி லெட்சுமி தேவியிடம் கூறுகிறார்.

எப்படி என்றால் ஆறு யுகங்களுக்கு முன்னால் குறோணி என்ற அசுரன் தோன்றினான். அவனை நான் ஆறு துண்டுகளாக வெட்டி அழித்தேன். அவனை அழிக்க வெட்டிய துண்டுகளில் 5 துண்டுகள் பூலோகத்தில் பிறவி எடுத்து அழிந்துவிட்டது. பரம சிவனை நினைத்து தவமிருந்து வரங்களைப் பெற்றும், ஆட்சி செய்ய முடியாமல் நீதி தவறி மோசமான வழிகளை பின்பற்றி இரக்கமற்ற அரக்கர்களாக நடந்து அழிந்து போனார்கள். முன் யுகத்திலுள்ள ஆறு பிறவிகளிலும் கடவுளை வணங்காமல் ஆணவத்தோடு நடந்தனர். அநியாயமாக வாழ்ந்ததால் அந்த ஆறு யுகங்களில் பிறந்த அசுரர்களை நாராயண மூர்த்தி பல அவதாரம் எடுத்து அழித்தார்.

“முன்னேப் பிறந்தக் குறோணிதனை மூவிரண்டாகவுடல் பிளந்து
தன்னை உயிரோடஞ்சும் செய்துப் சாமி தனை நினையாததினால்
வன்னத் திருமால் குலையடக்கி வந்தார் சடலமிழந்து குண்டம்
இன்னம் பிறப்பொன்றுண்டல்லவோ இறந்த குறோணியவன் தனக்கே”

மேலும் குருமுனிவர் சிவனைப் பார்த்து கூறுவார், சிவபெருமானே! நீடிய யுகத்தில் பிறந்த அரக்கனாகிய குறோணியின் உடலைப் பிளந்து ஆறுத்துண்டுகளாக்கி ஐந்துத்துண்டுகளுக்கு உயிர்க்கொடுத்து , கொடிய பாவம் செய்தக் காரணத்தினாலும், இறைவனைச் சற்றும் நினைக்காதக் காரணத்தினாலும் திருமால் அவர்களை அழித்தார். கடைசியாக இன்னம் ஒரு பிறவி இருக்கிறது என்று கூறினார்..

இவ்வாறு ஆறு யுகத்திலும் திருமால் பல அவதாரங்களை எடுத்து அவதாரங்களை எடுத்தார். பல வழிகளிலும் புத்திச் சொல்லி கேளாதக் காரணத்தினால் , அந்த அசுரர்கள் எல்லாம் அழிந்தார்கள். இன்னும் குறோணியின் ஆறுத்துண்டுகளில் ஒன்று மீதம் இருப்பதால் அவனையும் இந்த பூவுலகில் பிறக்க வைக்க வேண்டும் என்றுக் கூறினார் குருமுனிவர்.

நாராயண மூர்த்தி ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு அவதாரங்களை எடுத்து எல்லா அசுரர்களையும் அடியோடு ஒழித்து மனித உடல் எடுத்து வந்த பொய்யுடம்பையும் , தன்னுடைய முன்யுக அவதார சக்திகளையெல்லாம், பர்வதா மலை உச்சியிலே வைத்துவிட்டு , மெய்ஞான அறிவுடன் ஒளிமயமாக ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டு இருக்கிறார் என்று சொன்னார் குருமுனி.

உடனே சிவப்பெருமான் குறோணியின் கடைசித் துண்டை பிறவி செய்ய மாயனாகிய நாராயண மூர்த்தி வர வேண்டுமல்லவா? என்றுக் கேட்டார். உடனே ஒன்பதாவது அவதாரம் எடுப்பதற்காக சக்தி பெற உடல் எடுத்து பிறக்க வேண்டும் என்று தவம் செய்ய பூலோகம் சென்று உறங்குவது போல் மெய்ஞான அறிவுடன் ஒளிமயமாய் இருக்கிறார் என்று சொன்னார் குருமுனி.

இப்படி மாயப்பெருமானின் தன்மையை அறிந்த சிவன் சந்தோஷமடைந்து குரு சொன்னதை கேட்டு துவாபர யுகத்தில் உள்ள சப்தரிஷி மண்டலத்தில் வசிக்கின்ற மகா குருவாகிய வசிஷ்ட முனிவரையும், தேவர்களையும், திருமாலுக்கு பணிவிடைகள் செய்யும் தர்மிகளையும் வரும்படி அழைக்கின்றார். கிம்புருடர், கிங்கிலியர், கிணநாதர் போன்ற தெய்வ கணங்களையும், சிவலோகத்தில் உள்ள சிவ கணங்களையும், சக்தியுள்ள வேத சாஸ்திரங்களையும் ஓதுகின்ற சாஸ்திர வல்லுநர்களையும், ஆனைமுக கணபதி, ஆதி முனிவராகிய அகத்தியரையும், சங்கத்தார், சமயத்தார், எல்லோரையும் வரவழைத்து சிவபெருமான் விவரம் கேட்டார். எப்படி என்றால், குறோணியினுடைய கடைசி துண்டைப் பிறக்க வைக்க மாயன்வரவேண்டாமா? என்று சிவப்பெருமான் கேட்ட உடன், தேவர்கள் எல்லோரும் கூறுகின்றார்கள் ,

நாராயண மூர்த்தி இங்கு வர சாத்திமில்லை, அவர் கீழுலகில் மாண்டு கிடக்கிறார் என்றுக் கூறினார்கள். உடனே சிவப்பெருமான், குறோணியினுடைய கடைசித் துண்டைப் பிறக்க வைக்க என்று எல்லோரிடமும் ஆலோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் குறோணியினுடைய ஆறாவது துண்டம் பூமிக்குள் இருந்து, கால் பூமிக்கு மேலேயும், தலை பூமிக்குள்ளேயுமாக உயிர்பெற்றுக் கிளம்பியது.

## கலியன் பிறப்பு

எல்லோரும் இந்த ஆச்சரியமான நிகழ்வை சிவபெருமானிடம் வந்து சொன்ன உடன், சிவபெருமானும் அதைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டார் கைலாயத்தில் இருந்த சிவபெருமான் பூலோகத்திலுள்ள விநோதத்தைக் காண வருகின்ற சமயம், சிவபெருமான் வாகனமாகிய நந்தீஸ்வரர் சுவாமி! மூன்று லோகத்தாரும், தேவர்களும், மும்மூர்த்திகளுக்கும் மேலான உயர்ந்த நிலையில் இருக்கின்ற பரம்பொருளே! தாங்கள் பூலோகம் நோக்கி புறப்பட காரணம் என்னவென்றுக் கேட்டார்.

இப்படி நந்தியம் பெருமாள் கேட்க, சிவன் பதில் கூறுகின்றார் எப்படியென்றால், இதுவரை காணாத விந்தை பூமியில் நடக்கிறது என்று எல்லோரும் சொன்னார்கள். அதை பார்க்க செல்கிறேன்.விந்தை என்னவென்றால் வானத்தை நோக்கிய கால்களும், பூமிக்கு அடியில் தலையுமாக நடைமுறைக்கு மாறுபட்ட ஒரு பிறவி தலைகீழாக நிற்பது எதிர்மாறான புதுமையாக இருக்கிறதே என்றுப் பார்பதற்காக எழுந்து வந்தேன் என்றுசிவப்பெருமான் நந்தியிடம் கூறினார்.

சிவபெருமான் சொன்னதைக் கேட்டு நந்தீஸ்வரர், உலகத்தில் தான தர்மங்கள் எல்லாம் அழிந்து சீர் கெட்டுப் போக போகிறது. மரபு நிலை மாறுவதைப் பார்க்க நீங்கள் ஏன் பூலோகம் வரவேண்டும். தாங்கள் வந்த காரணத்தினால் எல்லா குலத்தவர்களும் அழியும் நிலை ஏற்படும். குசலவித்தைகள் செய்யும் மந்திரவாதிகள் தோன்றுவார்கள். ஒழுக்க நெறிகளும் மக்களிடம் குறைந்து விடும். விதிமுறைகள் அடங்கிய வேத ஆகமங்களுக்கு பாதிப்பு வரும் என்று சிவபெருமானுடைய வாகனமாகிய நந்தீஸ்வரர் சொல்ல, மனம் விரக்தி அடைந்த சிவபெருமான், கயிலையில் சென்று மீண்டும் அமர்ந்தார்.

******

## DAY 3

நடந்த புதுமையென்ன நாம்வருத்திப் பார்க்கவென்று
திடந்தெளிந்த மாமுனிவன் செப்பவே ஈசுரரும்
சாத்திர வேதச் சதுர்மறையைத் தான்வருத்தி
சித்திர புத்திரரைச் சீக்கிரத்தி லேயழைத்து
வந்த புதுமை வகையென்ன நம்கணக்கா
இந்தக் கணக்கை எடுத்துரைநீ யென்றனராம்
அப்போது ஈசுரரை அன்போ டுறவணங்கி
செப்போடு வொத்த சித்திரருஞ் செப்பலுற்றார்
சாத்திரத்தி லுற்ற தன்மை மிகக்கேளும்
சீத்துவ மாகச் சித்திரரும் செப்பலுற்றார்
முன்பிறந்த குறோணி உடலாறு துண்டதிலே
தன்பிறவி யோடாறு தான்பிறந்தான் சூத்திரமாய்
மண்தா னுடம்பு வந்துதித் தோன்றனக்கு
விண்தா னுடம்பு விலாசக் குருவோடு
சலந்தா னுடம்புக்கு உறுதி தைரியங்கள்
வலந்தா னிளகி வன்னியோ டுங்கூடி
கலந்து திரண்ட கட்டைமுண்ட மானதுக்குப்
பிலந்தூக்கும் வாயு பிராணன்கா ணீசுரரே
முப்பழியோ டாறு உயிரழித்த மாயனுக்கு
இப்போது வந்த இவன்தான் கொடிதுவையா
மாயனாலு முழமாய் மனுச்சிங் கமுகமாய்
வாயமாய் நம்மை வதைத்தானே யென்றுசொல்லி
அன்றா யனெடுத்த அளவா யுருவெடுத்துச்
சென்றா லவனுடைய திறத்தைநாம் பார்ப்போமென்று
வேகத்தால் துண்டம் வெடித்ததுகா ணிப்புதுமை
ஏகந்தா னாளும் ஈசனே யென்றுசொல்லி
இப்படியே சித்திரரும் எடுத்துரைக்கவே ஈசர்
அப்படியே வந்தவனுக்கு ஆயுசு மவன்பலமும்
கரணமுதல் நடப்பும் கட்டாக நீதேர்ந்து

மரணமுதல் நடப்பும் வகுத்துரைநீ நம்கணக்கா
அப்போது சித்திரரும் ஆதியருள் நெஞ்சில்வைத்து
பொற்பாத முண்டெனவே புகல்வா ரியல்கணக்கர்
அப்பனு மம்மை அடங்கிமிகப் பெறாமல்
கொப்பளித்துத் தானாய்க் குருத்துவந்த நீசனுக்குத்
தத்துவந் தொண்ணூறறு ஆறுந் தடிக்குணந்தான்
புத்தி புலனைந்தும் பொய்ப்பூண்ட பூதமுமாய்
சத்துருக்கன் கண்கால் தலையும் வெறும்நீசம்
உற்றுணர்ந்து பாராத உடலு மவன்காயம்
மாயக் காயமதுக்கு வருசமொரு நூறிருப்பு
தோயநாதத் துளிர் தொகைபத்துநூ றாயிரந்தான்
வாழ்வுவந்து சேர்க்கை வருசம் பதினாலு
தாழ்வு தசைநரம்பு சனித்தமுப்பத் தோராண்டில்
ஆர்க்கை எலும்பு அடைக்கும் நரம்புடனே
மூர்க்கத் தசையும் உதிரப் புனலுடம்பும்
மண்தண்ணீ ரோடே வகைக்காகாப் பாண்டமிது
விண்பரந்த வீடு வெளிவாயில் ஓட்டலுமாய்
ஓட்டை மடத்துக்கு ஒன்பது கொந்துடனே
வீட்டைப் பிரித்தால் விறகுக்கு மாகாது
விசையிட்டு ஆட்டும் வித்தாரப் பாவையிலும்
பசையில்லாப் பாவையிது பட்சியொன் றாடிவரும்
பட்சிக்குக் காயம் பகைத்துக்கிட்ட முட்டுகையில்
குச்சியைக் கீழ்ப்போட்டு குதித்தோடு மக்குருவி
இக்குருவிக் கூடு இவன்மணிய மீசுரரே
அக்குருவி யேகும் அவ்வளவு மிந்நீசன்
பண்ணுகிற நீசம் பரமனுக்கு மேராது
கண்ணிமைக்கு முன்னே கனவுருட்டுச் செய்திடுவான்
இப்படியே வுள்ள இயல்பு மிவன்நினைவும்
அப்படியே நீசம் அடைந்த மனவீடும்
உள்ளவனாய் வந்து உருவெடுத்தா னாகையினால்
எள்ளளவும் நன்றி இருக்காது ஈசுரரே
இவனாலநேகர் ஏற்றபொய்வம்போடும்
நவகோளுஞ்சொல்லி நரகமது போவார்கள்
என்று கணக்கர் எடுத்துரைக்க ஈசுரரும்
அன்று அவன்தனக்கு ஆளனுப்பித் தான்வருத்தி
ஆரைவிடு வோமென்று ஆராய்ந்து ஈசுரரும்
சூரமுள்ள காலன் தூத னெமன்தனையும்
துட்டமுள்ள பூதக் கிங்கிலியர் துர்க்கையையும்
மொட்டைக்குற ளிகளையும் முக்கோடிக் கூளியையும்
விட்டழைத்து வாருமென்று விடைகொடுத்தா ரீசுரரும்
துட்டக் குணத்தோர் துடியாய் மிகநடந்து
கொட்டங் கீழாகக் குருத்துநின்ற பாதகனை
தட்டு மிகமாறி தலைகீழாய் நின்றவனை
ஈச ரழைத்தார் எழுந்திருந்து வாவெனவே
நீசன் தனையழைக்க நெளிந்தே வுருண்டவனும்

பிரண்டுருளப் பிண்டம் பிசைபிசைந்து தான்மலங்க
மருண்ட விழியால் மாகம துகலங்கி
மண்ணை விட்டுயர மண்டைவர மாட்டாமல்
விண்ணெல்லா மெத்த வெம்மருண்ட தம்மானை
கயிலைக் கிடுகிடெங்கும் கண்டபேர் தாம்பதற
அகிலங் கிடுகிடெங்கும் அழைக்கவந்தோர் தாம்பதற
அரனா ரிடத்தில் அவர்கள்சில ரோடி
சிரமா னதுவெளியில் செல்லவர மாட்டாமல்
பூமி கலங்கிப் பொறுக்கமிகக் கூடாமல்
சாமியந்த நீசன் தான்வரவே மாச்சலுண்டு
என்றந்தத் தூதர் இப்படியே சொல்லிடவே
அன்று சிவனார் அதற்கென்ன செய்வோமென்று
தம்மாலே யாகும் தந்து தெளிந்தெடுத்துக்
கம்மாளன் வேலையினால் கவ்வையொன் றுண்டாக்கி
குத்திப் புறத்தே கோதிவையு மென்றுசொல்லி
எத்திசையும் நந்தி ஈசுவரனார் கைக்கொடுத்து
வேண்டியந்த நந்தி விரைவா யவர்நடந்து
ஊண்டிநின்ற நீசனையும் ஒருகவ்வை யால்கோதி
வெளியிலே வைக்க வெப்பெடுத்த பாதாளம்
பளிரெனவே வந்து பொருந்தியதே யம்மானை

விளக்கம்:

ஆறு வகையான சாஸ்திரங்களையும், நான்கு வேதங்களையும் பிரம்மாவினுடைய விதி ஆகமம் அத்தனையும் வரவழைத்து பிறப்பு, இறப்பு பார்க்கின்ற சித்திரகுப்த நாயனாரையும் அங்கே வரவழைத்து, பூலோகத்தில் நடந்த அதிசயத்திற்கு என்ன காரணம்? என்றும், இது மேலோகத்திலுள்ள விதிகணக்கா? என்று இங்கே இருக்கின்ற கணக்குகளைப் பார்த்து விவரமாக சொல்வாய் என்றார் சிவபெருமான்.

சிவபெருமான் சொன்னவுடன் சித்திரகுப்தர் சிவபெருமானை! பணிவோடு வணங்கி, ஆறு சாஸ்திரங்களிலும் உள்ள தன்மைகளைப் பற்றி கூறுகிறார். ஆதியில் உள்ள குறோணியின் உடலை வெட்டியதில் உள்ள ஆறு துண்டுகளில் ஐந்து பிறவிகள் முடிந்துள்ளது. சூத்திர விதிப்படி பார்த்தால், இவனுடைய உடல் உறுப்புகள் எல்லாம் மண்ணுக்கு சமமான நிலையை உடையது.

நீர் சக்திதான் அவனுடைய உடலுக்கு உறுதியையும் சுகத்தையும் கொடுக்கிறது. வலிமையான சக்தியோடு பூமிக்குள் இருந்து வெளியே வந்த அக்கினி போன்ற சூடான உடம்புடன், நிலம், நீர் நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து சக்தியோடு உருண்டு திரண்டு பிறந்த அவனுக்கு எதையும் ஆகாயத்தில் தூக்கி செல்லும் காற்று தான் அவனுடைய உயிர் என்று சொன்னார் சித்திரகுப்தர், மீண்டும் தொடர்ந்து கூறுவார்,

முன் பிறவியில் துன்பம் கொடுத்துக் கொண்டிருந்த ஐந்து துண்டுகளையும் ஐந்து முறை அழித்த மாய பெருமாளுக்கு இப்போதுப் பூலோகத்தில் வானத்தை நோக்கி கால்களும், பூமிக்கு அடியில் தலையுமாக தோன்றியவன் தான் மிக கொடியவனாக இருப்பான்.

பெருமாள் நான்கு முழ உயரம் கொண்ட மனிதனாக இருந்து, சிங்கம் போன்ற முகத்துடன் இருந்தும், மாயமான பலவித உடல் அமைப்புகளை பெற்று தான், நம்மை வதம் செய்து கொண்டான் என்று நினைத்து, துவாபரயுகத்தில் கிருஷ்ணர் எடுத்த உடல் அமைப்போடு ஒத்த மனித உருவம் எடுத்து கொண்டு திருமாலிடம் சென்று அவருடைய திறமைகளை பார்த்துவிடலாம் என்று மனதில் நினைத்துக்கொண்டு வெளியில் வந்தது தான் இந்த அதிசயம் ஈஸ்வரரே! என்று சொல்லி முடித்தார் சித்திரகுப்தன்.

இவ்வாறு எல்லா விவரங்களையும் கூறியதை கேட்ட சிவபெருமான் அதிசயப் பிறவி எடுத்துள்ள இவனுடைய ஆயுள் காலத்தையும், அவனுடைய பெலத்தையும் அவன் தலைகீழாக ஏன் பிறவி எடுத்துள்ளான் என்பதையும் , அதனால் நாட்டில் என்ன நடக்கும் என்பதையும் நன்றாக கணித்து பார்த்து சொல்ல வேண்டும் என்றார். உடனே அவன் மரணம் வரை நடக்கும் செயல்களையும் சித்திரகுப்தன் கூறுகிறார். தகப்பனும் தாயும் சேர்ந்து உலக நடைமுறையைப் போல் மனிதர்களுக்கு பிறக்காமல் தனித்தன்மையோடு பூமிக்குள் இருந்து தானாகவே புல்லைப் போல் முளைத்தவன் தான் இந்த கலியன்.

இப்படி வந்தக் கலிநீசனுடைய குணங்கள் எப்படி இருக்குமென்றால், தத்துவம் தொண்ணூற்றாறும் தடிக்குணங்களான முரட்டு குணம் உடையவன். இவன் பாவம் செய்யும் குணம் உடையவன். அவனுடைய ஐம்புலனும் பொய் உடலாய் பூதம் போல் தடித்து இருக்கும். எதை செய்தாலும், எதைக் கூறினாலும் பொய்யாகவே இருக்கும். உண்மை அணு அளவு கூட இருக்காது. இவனுக்கு எதிரிகளாக அவனுடைய கண்களும், கால்களும் தலையும் தான் அவனுக்கு துன்பத்தை ஏற்படுத்தும்.மாயமாய் மண்ணுக்குள் இருந்து வெளியே வந்த அவன் உடம்புக்கு ஆயுள் காலம் நூறு ஆண்டுகள். அதற்கு மேல் செல்லாது.

கலியனாகிய அவனுடைய நாத விந்துக்களின் எண்ணிக்கை பத்து லட்சம் ஆகும். அவன் 14 வயதிலேயே வாலிப பருவத்தை எட்டிவிடுவான் முப்பத்தி ஒன்றாவது வயதில் நரம்பு தசைகளும் தளர்ச்சியடைந்து முதுமை நிலையை அடைவான்.

கலியன் உடைய எலும்பும், எலும்போடு சேர்ந்திருக்கும் நரம்பு பாகங்களும் வலு குறைந்து போகும். முரட்டுத்தனமான சதை அமைப்பும், ரத்தத்துடன் கூடிய தண்ணீர் தேகமாய் அவன் உடம்பு இருக்கும். எந்த வகைக்கும் பயன்பெறாத உடம்பாக இருக்கும். இப்படி எந்த பயனும் இல்லாத உடலில் மொத்தம் ஒன்பது வகையான துவாரங்கள் கொண்டதாக இருக்கும். இறந்த பிறகு உடலை பார்த்தால் விறகுக்கு கூட ஆகாத அழுகிய பாண்டமாகும். மனம் ஆசையில் உழலும். இந்தப் பொய் உடலில் பட்சியைப்போல் பறக்கும் உயிர் உள்ளே ஆடிக்கொண்டிருக்கும்.

நிரந்தரம் இல்லாத போது உடலுக்குள் இருக்கும் உயிர் சக்தியானது, குறைந்து உடலுக்கு எதிரியாக மாறி நோய்வாய்ப்பட்டு அவதிப்படும் போது மரக்கட்டை போன்ற உடலை பூலோகத்தில் மண்ணுக்கு இரையாக போட்டு விட்டு இந்த உடலுக்குள் இருக்கும் குருவியாகிய உயிர் ஓடிவிடும் . உயிரோடு வாழும் மனிதனின் உடல் சக்தியின் மதிப்பு காற்றடைத்த பை போன்றது. காற்றாகிய உயிர் போய் விட்டால் கட்டை பிணமாக விழுந்துவிடும். இந்த கலியனின் உடலின் சக்தியின் மதிப்பு இவ்வளவுதான் ஈஸ்வர பெருமானே! என்று கூறினான் சித்திரகுப்தர்.

இப்படி எல்லா சாஸ்திர விதிகள் அடங்கிய நூல்களைப் பார்த்து விவரமாய் சொன்னதைக் கேட்ட ஈஸ்வரர் கலியனை தன்னிடம் அழைத்து வரத் தூதுவர்களை அனுப்பினார். தைரியமாய் சென்று அழைத்து வருகின்ற எம, கால, தூதுவர்களையும் கிங்கிலியர், மற்றும் பூதகணங்கள் மூன்று கோடி குட்டிசாத்தான்களையும் அழைத்து விவரம் சொல்லி கலியனை அழைத்து வர அனுமதி கொடுத்தார்.

உடனே எல்லோரும் வந்து, தலைகீழாக நின்ற கலியனிடம் உலகத்தை படைத்த ஈஸ்வரர் உன்னை அழைக்கிறார் எங்களுடன் வரவேண்டும், உன்னை அழைத்து வர எங்களிடம் கூறினார் என்றதும் கலியன் மண்ணை விட்டு வெளியே முடியாமல் தவித்ததைக் கண்டு எல்லோரும் பதறிப்போனார்கள். அழைக்க வந்தவர்களில் சிலர் ஓடிப்போய் சிவபெருமானிடம் கலியனின் தலை வெளியே வர முடியாமல் திணறுகிறது என்ன செய்யலாம் என்று கேட்டார்கள்.

அதை கேட்ட சிவபெருமான் அதற்கு என்ன வழி என்று யோசனை செய்து கவ்விப் பிடித்து இழுக்கின்ற கவுளிப்போன்ற சுரண்டி ஒன்றைக் கொண்டுப் போய் மண்ணிலிருந்து குத்தி தோண்டி எடுக்கும் படி நந்தியிடம் கூறினார். கம்மாளன் தன் கையில் இருக்கும் கௌவையை நந்தீஸ்வரரிடம் கொடுத்து அவனை வெளியில் குத்தி தள்ளி அழைத்து வா என்று அனுப்பி விடுகிறார்

சிவபெருமான் கூறியதும் நந்தீஸ்வரர் பூலோகத்திற்கு சுரண்டி என்ற ஆயுதத்துடன் வந்தார். பூமியில் இருந்து வெடித்து வந்த கொடிய கலிநீசனை நந்தீஸ்வர் சிவபெருமானை மனதில் தியானித்து கவ்வையொன்று உண்டாக்கி குத்திப் புறத்தே கோதி வைத்தார் .நந்தியம் பெருமாள் இயற்கையான வலிமை பெற்றவர் ஆனால் இயற்கைக்கு மாறுபட்ட நந்தீஸ்வரர் ஒரே மூச்சில் வேகமாக தன் கொம்புகளால் குத்தி மண்ணில் இருந்து வெளியே எடுத்தார். [இதனால் காளை மாடுகளின் பெலம் இருக்கொம்புகளில் இருக்கின்ற தன்மை உணரப்படுகிறது].

இவ்வாறு ஒரே மூச்சில் தூக்கி வெளியே போட்டதும் அவன் இருந்த இடம் பூமியின் மிகப்பெரிய பாதாளக் குழியானது. தலை கீழாக நின்ற கலியனை ஒரே மூச்சில் தூக்கி வெளியில் போட்டதும், அவன் இருந்த இடம் பூமியில் மிகப்பெரிய பாதாளக் குழியானது. பிளவுப்பட்ட பாதாள குழி கலியனை வெளியே தூக்கியதும் , பாதாளம் நிரம்பி சமமான பூமியாக அதிசயத்தோடு பொருந்திக்கொண்டது.

*********

# DAY 4

பூமிதனில் வெடித்த பொல்லாத நீசனையும்
சுவாமிமுன் பானதிலே சுரண்டியத னாலிழுத்து
கொண்டுவந்து விட்டார் குருநாதர் முன்பதிலே
கண்டுஅந்த ஈசர் கனமாய் விசேசமுற்று
உன்றனக்கு வேணுமென்று உகந்ததெல்லா மிப்போது
என்றனிடங் கேளென்று ஈசுரனார் தானுரைக்க
உடனே யவனும் உள்ள மிகக்களித்து
விடமேதான் பூண்டு விரிகந்தைத் தானுடுத்து
மேலெல்லாங் குப்பை மிகப்பூசி யானையுடத்
தோலி லிருப்பவனோ சொன்னதெல்லாந் தாறதுதான்
என்று களிப்பாய் ஈசுரரை யந்நீசன்
அன்று மொழிய அமர ரதையறிந்து
பொல்லாத நீசா பொருளறிய மாட்டாமல்
எல்லாரைப் போலே ஏசாதே ஈசுரரை
லோகம் படைத்தவர்காண் உறுபொருளாய் நிற்பவர்காண்
ஏகம் நிறைந்தவர்காண் இறவா திருப்பவர்காண்
பட்சிப் பறவை பலசீவ செந்துகட்கும்
நிச்சயமாய்ப் பொசிப்பு நிதமு மளிப்பவர்காண்
மாயவனும் நான்முகனும் மறையு மிகக்காணாமல்
தேயவா றுங்காணாத் திட்டிக்க வல்லவர்காண்
இத்தனையும் நீசனுக்கு இயம்ப அமரர்களும்
புத்திக்கு நட்புப் போதாமல் பின்சொல்லுவான்
ஆனால்தான் தேவர்களே அப்படிநீ ரொப்பினீரே
தானா யிருந்து சர்வமதுமுண் டாக்கிவைத்த
ஆனா லெனதுடைய அளவி லளவாக
மானா ரொருகுழலை வகுக்கச்சொல் பார்ப்போங்காண்
என்றந்த நீசன் இழிவாகச் சொல்லிடவே
அன்றந்த ஈசர் அவரறிந்து ஏதுரைப்பார்
நல்லதுநீ கேட்டதுதான் நாம்படைத்துத் தாறோமென்று
வல்லபர மேசுரனார் வகையே தெனப்பார்த்து
உந்தனக்கு நேரே ஒத்த பலம்போலே
அந்தமுடன் பிறந்தால் ஆகுமோ வென்றுரைத்தார்
அப்போது நீசன் அரனார் தனைநோக்கி
ஒப்பமாகா தென்பலத்தில் ஒன்றி லரைப்பலமாய்
அழகி லதிகமுமாய் ஆங்காரம் பாதியுமாய்
குழகிய வாயழகாய்க் குரும்பத் தனத்தழகாய்
மேனி யழகாய் விழியழகாய் வீச்சழகாய்
யோனி யழகாய் ஒடுங்கு மிடையழகாய்
கரமழகாய்க் காலழகாய்க் கண்ணழகாய்ப் பல்லழகாய்
சரக்கூடு முன்னழகாய்த் தலைகண்டம் பின்னழகாய்
தொடையழகாய் விரலழகாய்ச் சொல்லழகாய்ப் பல்லழகாய்
நடையழகாய் வீச்சழகாய் நல்ல குழலழகாய்

இடையழகாய் மேனி இறுக்கத் துடனழகாய்
உடையழகாய்த் தேகம் ஓங்காரத் தொங்கலுமாய்
அழகுக்கு ஏற்ற அத்தர் மணத்தோடு
கழப கஸ்தூரி கம்மென்ற வாசனைபோல்
மூவர்தே வர்களையும் மோக மாய்மயக்கச்
சீவ னதுகொடுத்துத் திட்டித்துத் தாருமென்றான்
அப்போது ஈசுரனார் அகமகிழ்ந்து கொண்டாடி
இப்போது கேட்டதற்கு என்செய்வோ மென்றுசொல்லி
அருகில் சிவனார் அகமதிலே வீற்றிருக்கும்
திருவுக்கு நன்றாய்த் தெரிவித்தா ரம்மானை
கேட்டமா நீசனுக்குக் கீர்த்தியென்ன மாமயிலே
தேட்டமுட னிப்போ செப்பென் றெனவுரைத்தார்
அப்போது சத்தி ஆதி யடிவணங்கி
ஒப்பொன் றில்லாத உடைய பெருமானே
பாதியாய் நீசனையும் பகுந்தே யவனுடம்பில்
விதியாயிடது விலாவி லொருயெலும்பைத்
தட்டிக் கழற்றி சச்சுவருந் தானாக்கி
திட்டித்து நீசனுக்குச் சிணங்கொடுவு மீசுரரே
என்று உமையாள் இப்படியே சொன்னவுடன்
அன்றுஅந்த நீசனுட அரையிலோ ராக்கையிட்டு
இருக்கக் கீழ்கட்டி எழுந்திருநீ யென்றவுடன்
பொருக்கென வேயிடது புறத்தி லொருயெலும்பைத்
தெறிக்க அதையும் சிவனார் மிகப்பார்த்து
வெறிகொண்ட நீசன் விலாவி லொடித்ததினால்
நீசன் பலத்தில் நேர்பாதி யாகுமென்று
வாசமட வாய்வரவே மதன் தனைநினைத்தார்
மதனை யரன்நினைக்க மாநீசன் தன்னெலும்பு
வதன மடமாதாய் வந்ததுவே யம்மானை
நீசன் நினைத்த நினவுபோ லம்மடவை
பாசக்கலை தூவி பகட்டிவிழித் தாள்மருட்டி
மும்மடங்காய் மோகம் முருகுக் குழல்சரிய
கம்மடங்காத் தோசம் கரைபுரளத் தான்பிறந்தாள்
கண்டானே மாநீசன் கண்கொள்ளாக் காட்சியுடன்
அண்டாளைச் சென்று ஆவிமுகத் தோடணைத்து
நன்றாகத் தர்மம் நாள்தோறுஞ் செய்துகுண்டம்
கண்டாரைப் போலே கட்டினான் மங்கையரை
மங்கையரை நீசன் வாயாரா முத்தமிட்டுக்
கொங்கைதனைக் கண்டு கொண்டாடி ஆசையுற்று
எடுப்பா னவளை இடுப்பிலே வைத்திடுவான்
படுப்பமோ வென்று பாய்விரிக்க நின்றிடுவான்
பெண்ணோ டுறவாடிப் பேதலித்து அந்நீசன்
மண்ணோடு மண்ணும் மருவுவது போல்மருவி
ஆசை யவள்பேரில் அங்கமெல்லாந் தானுருகி
நீச னவள்பேரில் நினைவாக நின்றதல்லால்
படைத்தருளி வைத்த பரமனையு மெண்ணாமல்

தடதடெனப் பெண்ணைத் தானெடுத்து முத்திடுவான்
அப்போது தேவர் அமரர்களும் பார்த்தவனை
இப்போது உன்விழிக்கு ஏற்கும் படியாகப்
பெண்படைத்துத் தந்த பெரியோனைத் தான்வணங்கி
மண்பரந்த மன்னா வரங்கேளு என்றனராம்
என்ற பொழுது இயல்புகெட்ட மாநீசன்
அன்றந்த ஈசர் அடிவணங்கி யேதுசொல்வான்
என்றனக்கு ஏற்ற இளமயிலை யுண்டாக்கித்
தந்தருளுங் கோவே சர்வ தயாபரனே
இனியெனக்கு ஏற்ற இயல்வரங்க ளானதெல்லாம்
கனியிதழும் வாயானே கையில்தர வேணுமென்றான்

விளக்கம்:

வெளியில் வந்த கலியனை நந்தீஸ்வரர் சுரண்டி ஆயுதத்தால் தள்ளிக் கொண்டு சிவபெருமானிடம் வந்தார். கலியனைப் பார்த்த சிவபெருமான் அவனுடைய பெருத்த உடல் கண்டு ஆச்சரியப்பட்டார். கலியனிடம் சிவபெருமான் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். அதை கேட்ட கலியன் கொஞ்சமும் பயம் இல்லாமல் ஏளனமாகச் சிரித்து கொண்டு சிவபெருமானிடம், கழுத்தில் பாம்பை அணிந்து, உடம்பெல்லாம் சாம்பலை பூசிக்கொண்டு காட்டில் வாழும் மிருகத்தின் தோலை போர்த்திய படி இருக்கக்கூடியவரா, நான் கேட்பதை தருபவர் என்று நகைத்தான்.

கலி நீசனானவன் சிவனை தரக்குறைவாகப் பேசியதை கேட்ட வானலோகத்தார் , உலகத்தை படைத்த ஆதிப் பரம்பொருள் உலகமெங்கும் மறைபொருளாய் நிறைந்திருப்பவர் பிறக்கின்ற உயிர்கள், முதல் எல்லா உயிர்களையும் பாதுகாப்பவர். திருமாலும், நான்கு முகம் கொண்ட பிரம்மாவும், பார்க்க முடியாமல் மறைந்திருக்கும் வல்லமை கொண்டவர், என்று வானலோகத்தாரும், ரிஷிகளும் சொன்னது கேட்ட கலிநீசன் எவ்வாறுக் கூறுகிறான் என்றால்,

எல்லா தன்மைகளுக்கும் மேன்மையாக இருந்து சர்வ உலகத்தையும் படைத்து வைத்தது உண்மை என்றால், வல்லமை கொண்ட சக்தி படைத்தவர் என்றால், எனக்கு பொருத்தமான ஒரு அழகு வாய்ந்த பெண்ணை படைத்துத் தரச் சொல் பார்க்கலாம் என்று சவால் விட்டான். அவன் பேசிய வார்த்தையை கேட்ட பெருமான், நீ கேட்டது போல் படைத்து தருகிறோம் என்று உறுதியாகக் கூறினார். உன்னை போன்ற பலசாலியான அமைப்புடன், மிகப் பெரிய உருவத்தில் முண்டம் போன்ற வடிவாய் பிறவிச் செய்தால் போதுமா? என்றுக் கேட்டார். அதைக்கேட்ட கலிநீசன் என்னுடையப் பெலத்திற்குச் சமமாக இல்லாமல், பாதி பலம் கொண்டவளாகவும் என்னை விட அழகாக இருக்க வேண்டும்.

முன்னழகும், பின்னழகும், ஒய்யார நடையழகும் கொண்டவளாய் இருக்க வேண்டும் என்றும், மும்மூர்த்திகளும், தேவர்களும் கண்டு மகிழும் படியாக படைத்து தாரும் என்றான். கலியன் சொன்னதை கேட்ட சிவபெருமான், அதிக

ஆசையால் அழியப் போகும் அவல நிலையை எண்ணி சந்தோஷப் பட்டு, பார்வதி தேவியிடம் விவரமாக சொல்லி என்ன செய்யலாம் என்று ஆலோசித்தனர். சக்திதேவி அவர் திருவாய் மலர்ந்து சிவபெருமானிடம் சொல்வாள், ஈஸ்வர பெருமானே! அவனுடைய உடம்பை இரண்டுப் பாதியாக்கி, இடது பக்கம், வலது பக்கம் என்றுப் பிரித்து, முன்வினை விதியின்படி அவனுடைய இடது பக்கம் உள்ள விலா எலும்பிலிருந்து ஒரு எலும்பை கழற்றி எடுத்து, பெண் தன்மைக் கொண்டவளாக உருவாக்கி விடுங்கள் என்று கூறினாள் அம்மை உமையவள்.

இவ்வாறு பார்வதி அம்மை சொன்ன அறிவுரையைக் கேட்ட சிவன் மன திருப்தியோடு கலி நீசன் இருந்த இடத்திற்கு சென்று ஒரு நீண்ட கயிற்றை கொண்டு அவனது இடது பக்கமாக கட்டி இறுக்கினார். கட்டு இறுகியதும் அது மிக வேகமாக கலியனுடைய இடது பக்கம் உள்ள விலா எலும்பை முறித்து எடுக்கப்பட்டது. அந்த கலியனுடைய விலா எலும்பிலிருந்து ஒடித்து எடுத்தப் படியால் கலிநீசனுடைய அபார சக்தி வாய்ந்த பெலத்தில் நேர் பாதி அவளுக்கு இருக்கும் என்றார் சிவபெருமான்.

ஒரு செயலை செய்ய வேண்டும் என்றால் இன்னொரு செயல் தவிர்க்கப்படவேண்டும். ஒரு தீமை செய்தால், நன்மையை இழக்க நேரிடும். அதுபோல தீமையை அழிக்க வேண்டும், ஆதலால் ஆணவத்தை குறைக்க வேண்டும், அவன் உடலிலிருந்து இரு பாதியாகப் பிரித்து ஒரு பாதியில் உள்ள எலும்பை முறித்து எடுத்தால்தான் முதல் பாதி வலிமை இழந்தது. இதுதான் பார்வதி தேவியின் கருத்து. அதை சிவபெருமான் ஒத்து கொண்டு செயல்பட்டார்.

இதுபோல் கணவன் மனைவியுடன் இல்லற வாழ்வில் ஈடுபடுபவர்கள் என்றால். இருவரும் ஒற்றுமையாக சரி, பாதியாக செயல்பட்டால் தான் இல்லறம் இனிக்கும். நல்ல மனைவி கணவனுக்கு ஒரு அறிவுள்ள மந்திரியாக செயல்படுபவர். மனைவி சொல்லை கணவன் கேட்டும் , கணவன் சொல்வதை மனைவி கேட்டும் நடந்தால் தான் வீடு ஒரு பல்கலைக்கழகமாக செயல்படும். அறிவுள்ள மந்திரி மன்னனுக்கு துணையாய் இருந்தால் தான் மன்னன் சிறப்படைவான். இல்லறம் சிறப்படைய இருவரும் ஒற்றுமையாக பாடுபட வேண்டும்.

*****

## DAY 5

கலியன் கேட்ட வரங்கள்

அப்படியே ஈசர் அவனை முகம்நோக்கி
இப்படியே உன்றனக்கு ஏதுவரம் வேணுமென்றார்
என்ற பொழுது இயல்புகெட்ட மாநீசன்
தெண்டனிட்டு ஈசர் திருவடியைத் தான்பூண்டு
கேட்பான் வரங்கள் கீழுமேலும் நடுங்க
வீழ்ப்பாரங் கெட்ட விசைகெட்ட மாநீசன்
மாயவனார் தன்னுடைய வாய்த்த முடிதனையும்

தூயவனார் சக்கரமும் சூதமுடன் தாருமென்றான்
அரனுடைய வெண்ணீறும் அந்தணரின் தன்பிறப்பும்
வரமுடைய சத்தி வலக்கூறுந் தாருமென்றான்
சிவமூலஞ் சத்தித் திருமூல மானதுவும்
தவமூலம் வேதாவின் தன்னுடைய மூலமதும்
மாலுடைய மூலம் வாய்த்தலட்சுமி மூலம்
மேலுடைய தெய்வ விதமூலமுந் தாரும்
காலனின் மூலம் காமாட்சி தன்மூலம்
வாலைச் சரசோதி மாகாளி தன்மூலம்
கணபதி யின்மூலம் கிங்கிலியர் மூலம்
துணையதிப னான சுப்பிரமணியர் மூலமதும்
ஆயிரத் தெட்டு அண்டம்நிறை மூலமெல்லாம்
வாயிதக் கண்ணே வரமாகத் தாருமென்றான்
அல்லாமற் பின்னும் அந்நீசன் கேட்டவரம்
பொல்லாத வித்தை புகலக்கே ளொண்ணுதலே
கூடுவிட்டுக் கூடு குதிக்கக் கருவதுவும்
நாடு பாழாக்கி நகரிகொள்ளை யாக்கிடவும்
துயில்வோர் போலுலகம் துஞ்சவைத்துக் கொள்ளைகொண்டு
அயதிமோ கினிக்கருவும் அரனேநீர் தாருமென்றான்
ஆவடக்கு மோகினியும் அழைக்கவெகு மோகினியும்
நாவடக்கு மோகினியும் நருளழைக்கும் மோகினியும்
ஆண்பெண் பிரிக்க அதிகவெகு மாரணமும்
கோண்பிரித்துக் கட்டிக் குடிகெடுக்கும் மாரணமும்
கொல்ல உச்சாடனமும் குடிகெடுக்க மாரணமும்
தொல்லை வருத்தி சோலிசெய் யுச்சாடனமும்
லோகமது வாழாமல் உள்ளமுங்கித் தாழ்ந்திடவும்
ஏக தம்பனமும் இதின்கரு வுந்தாரும்
கொட்டிக் கலைக்க கூறுடையச் சல்லியமும்
ஒட்டியமுந் தாரும் உள்ளகரு வுந்தாரும்
பூசை முறையும் புவனச்சக்க ரமுடனே
தீட்சை விதிமுறையும் சிவவிதியுந் தாருமையா
சலமேல் கனல்மேல் தானிருக்கு மோடிகளும்
கலைமேல் குடைபிடிக்கக் கருவது வுந்தாரும்
மிருக மதைவருத்தி வேலையது கொண்டிடவும்
இறுக்கமுள்ள வாதை எனக்குவிட்டுத் தாருமையா
அட்டகர்ம மெட்டும் அடக்கிவரந் தாருமையா
மொட்டக் குறள்களையும் முன்னேவலாய்த் தாரும்
மந்திர சாலம் மாய்மாலத் தந்திரமும்
இந்திர சாலம் எனக்கருளு மென்றுரைத்தான்
நோவுக் கிரகம் நுழையாம லென்றனக்குத்
தாவுருக்கெவுனக் குளிகை தாருமென்றான் மாநீசன்
வந்த பிணிதீர்க்க வைத்திய வாகடமும்
தந்துதந் தாகப்பல சாஸ்திர முந்தாரும்
மூவருட வடிவும் உதித்துவந்த முற்பிறப்பும்
தேவருட பிறப்பும் தெளிந்தெழுதித் தாருமென்றான்

பறக்குங் குளிகை பரனையழைக் குங்குளிகை
மறைக்குங் குளிகை மாலைவருத் துங்குளிகை
சாலக் குளிகை சத்திவருத் துங்குளிகை
வாலைக் குளிகை மறையைவருத் துங்குளிகை
காளிதனை வருத்திக் கைக்குள் விடுங்குளிகை
கூளிகணத் தைவருத்திக் கொண்டுவரும் நற்குளிகை
தேவரையும் வானவரைச் சென்றழைக் குங்குளிகை
மூவரை யுமழைத்து மோடிசெய்யுங் நற்குளிகை
பழிசெய்தால் வெல்லப் பாரத் தொழில்கள்முதல்
சுழிவரைகள் தானறிய சூதானமாய்த் தாரும்
மருட்டு விதமும் மாஞாலக் குண்டணியும்
உருட்டுங் கொடிய உரம்பேசிய மதமும்
வாள்வெடிக ளாயுதங்கள் வாய்தடுக்கத் தந்திரமும்
வேழ்வருத்தி வேலைகொள்ள விசையடக்குந் தந்திரமும்
துட்ட மிருகம் தூறுவிசங் கொண்டதெல்லாம்
கட்டுக்குள் கட்டிக் கீழ்ப்படியத் தந்திரமும்
கட்டுச் சுருக்கும் கடியபல வித்தைகளும்
நட்டு முட்டுள்ள நவநிதிய வஸ்துக்களும்
தந்திந்தப் பெண்ணுடனே சார்ந்துவிளை யாடிருந்து
விந்து சனங்கள் மிகுவாகத் தானுதித்துக்
கிளையோடே வாழ்வு கெறுவித மாயாண்டு
வளையான மாதை மறவாம லெப்போதும்
புத்திக் கருத்தும் பெண்பேரி லென்றனக்குச்
சற்றும் நெகிழாமல் தாரும்வர மென்றுரைத்தான்
அப்படியே வுள்ளவரம் அந்நீச னுக்கருள
எப்படித்தா னென்று எண்ணினா ரீசுரரும்
எண்ணியே ஈசர் ஏந்திழையாள் சத்தியுடன்
புண்ணிய நாதன் புகலலுற்றா ரம்மானை
முப்பத்தி ரண்டறமும் முகித்திருந்த வொண்ணுதலே
செப்புத் தனத்தழகு செவ்வே கருங்குயிலே
வின்னோத நீசன் விபரீதமாய்க் கேட்டதற்கு
இன்ன விதமென்று இயம்புநீ பெண்மயிலே
அப்போது சத்தி ஆதி யடிவணங்கி
நற்போது மறவா நல்லகன்னி யேதுரைப்பாள்
சாத்திரமும் வித்தைகளும் தந்திரமுங் கேட்டதினால்
சூத்திரச் சித்தனொன்று சுறுக்காயுண் டாக்குமென்றாள்

விளக்கம்:

கலியன் கேட்ட வரங்கள்

உடனே கலியன் சிவபெருமானுடைய திருப்பாதங்களை வணங்கி நான் விரும்பிய மனைவியை எனக்கு தந்த சிவபெருமானே! இனி எனக்கு தேவையான நல்ல பெருமை வாய்ந்த வரங்களை எல்லாம் தாரும் என்று வேண்டினான். அவன் கேட்ட வரங்களைக் கொடுக்க ஆசைப்பட்ட

சிவபெருமான் அவனை பார்த்து, நீ கேட்கும் வரங்கள் தருகிறேன். உனக்கு எப்படிப்பட்ட வரங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டார். கலியன் எதையும் சிந்திக்காமல் கேட்ட வரங்கள் மேலும் கீழும் நடுங்கும் படியாக இருந்தது.

அழிந்து போகக் கூடிய விதத்தில் எந்த அறிவும் இல்லாத கலியன், இறைப் பற்றுதல் இல்லாத நீசன், மாய பெருமாளுக்கு சொந்தமான முடிசூடி உலகத்தை பாதுகாத்து கொண்டிருக்கின்ற கிரீடத்தையும், தூய்மையான அவருடைய கைகளில் இருக்கின்ற சக்கரத்தையும், பேராசை கொண்டு தாரும் என்றான். மற்றும் சிவபெருமானிடம் கலியன் கேட்ட வரங்கள் கணக்கிலடங்காதவை சொல்ல போனால், அவன் கேட்ட வரங்கள் திருமுடியில் தொடங்கி திருவடி வரை என்ன என்ன உண்டோ அத்தனையும் கேட்டான். சிவபெருமானும் மனம் மகிழ்ந்து அத்தனையும் தந்தேன் என்றார். கருணை பார்வை கொண்ட ஈசன் அவன் கேட்டதையெல்லாம் வரமாக கொடுத்தார்.

பேராசை கொண்ட கலியன் தனக்கு ஏற்படப்போகும் துன்பத்தை தன் அழிவை தேடி கேட்ட வரங்களை எல்லாம் கேட்கிறான் என்று மறக்காமல் தந்தேன் என்று கூறினார். பின்பு பார்வதி தேவியுடன் சிவபெருமான் வினோதமான முறையில் ஆபத்தை உண்டாக்கும் வரங்களை கேட்கிறான் ,எந்த வழியில் கொடுக்கலாம் என்று ஒரு நல்ல வழியை கூறுவாய் என்று கேட்டார். எல்லாம் அறிந்த பார்வதிதேவி, ஆதிச் சிவனிடம் கூறுகின்றாள், கலியன் சாஸ்திர நூல்களையும், மாய வித்தைகளையும் கேட்பதால் அவனை வீழ்த்த தந்திரமான பல பொருள் அடங்கும்படி செயல்படும் ஞான அறிவுள்ள ஒருவரை உருவாக்கும் படி சொன்னாள்.

*********

## DAY 6

### அகத்தீசர் பிறப்பு

உடனேதான் ஈசர் உள்ளங்களி கூர்ந்து
திடமாய்த்தான் ஈசர் சிந்தைதனி லுத்தரித்து
அகத்தீச னென்று ஆதிமன துள்ளிருந்து
செகத்தோர்கள் காண சித்தாதி தானாகி
சாத்திரமும் வித்தை சமூலக் கருவுடனே
சூத்திரச் சித்தாதி தோன்றினன்கா ணம்மானை
எல்லோருங் கண்டு இவராகு மென்றுசொல்லி
அல்லோரு மெச்சி அகமகிழ்ந்து கொண்டாடி
நல்லதென்று ஈசர் நன்முனியைத் தானோக்கி
வல்ல கவியோடு வந்துதித்த சாஸ்திரியே
என்னென்ன சாஸ்திரங்கள் ஏதேதுக் கானாலும்
இன்னாநிற்கும் நீசனுக்கு ஈந்து கொடுவுமென்றார்
அப்போ தகத்தீசர் ஆதிமறை முதலாய்

மைப்போடும் வித்தை மாஞால அச்சரமும்
கொடுத்தோ மெனவே கூறினார் மாமுனியும்
கடுத்தமுள்ள நீசன் கையதிலே தான்வேண்டி
நிற்கவே பின்னும் நிகழ்த்துவார் மாமுனியும்
அக்கறுகு சூடும் ஆதிமுத லந்தம்வரை
வசமாகும் வித்தை மரணம்வரா வித்தைகளும்
நிசமாகும் வித்தையெல்லாம் நீசனுக் கேகொடுத்தோம்
கொல்லவே மெத்தக் கோபத்தால் நீசனையும்
வெல்லவகை யில்லையல்லோ விடையேறு மீசுரரே
இந்நீசன் லோகமதில் இருந்தாளும் நாளையிலே
அன்னீத மல்லால் அறமறிய மாட்டானே
செய்வதெல்லாம் பாவச் சிந்தனையேயல்லாது
மெய்வரம்பு சற்றும் மிகவறிய மாட்டானே
அல்லாமற் பின்னும் அச்சுதனார் சக்கரமும்
பொல்லாதான் கொண்டு போறான்மால் கிரீடமும்
இவ்வரிசை ரண்டும் இவனிடத்தி லேயிருந்தால்
எவ்வொருவ ரால்வதைக்க ஏலாது நீசனையும்

விளக்கம்:

அகத்தீசர் பிறப்பு

பார்வதித் தேவி சொன்னதைக் கேட்ட சிவபெருமான் உடனே திடகாத்திரமான மனதில் தியானித்தார். சிவபெருமான் தியானித்த உடன் அவருடைய புனிதமான உள்ளத்திலிருந்து ஒரு சக்தி வெளிவந்தது. ஆதிப்பரம் பொருள் அகத்தில் இருந்து வெளிவந்த சக்தியானதால் அகத்து + ஈசன்= அகத்தீசன் என்ற பெயரில் வெளிவந்து சிவனையும், பார்வதியையும் வணங்கி வந்தார். பார்வதியும், சிவனும் வணங்கியவனைப் பார்த்து மனம் மகிழ்ந்தார்கள்.

புதிதாக தோன்றிய அகத்தீசனை உலக மக்கள் அனைவரும் கண்டு கொள்ளுமாறு ஞான அறிவு உள்ள சித்தனாக ஆக்கினார். சிவன், வேத சாஸ்திரங்களும், தந்திர வித்தைகள், சர்வ சக்திகளும் பொருந்தி, சூத்திர கணக்குகளை எழுதும் சித்தர்களுக்கெல்லாம் முதன்மையானவராக உருவாக்கினார்.

அகத்திலே தோன்றிய அகத்தீசரைப் பார்த்து கலியனை அழிப்பதற்கு இவனே தகுதியானவன் என்று நிம்மதியானார்கள். சிவனின் அகத்தில் தோன்றிய அகத்தீச முனிவரைப் பார்த்து, பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கண தன்மையோடு இவ்வுலகிற்கு வந்து தோன்றிய வேதச் சாஸ்திரியே!

எந்தவிதமான சாஸ்திரங்கள் ஆக இருந்தாலும் எந்த தேவைகளுக்காக இருந்தாலும் இந்த கலி நீசனுக்கு அவன் கேட்பதை மறுக்காமல் கொடுத்துவிடும், என்று சிவபெருமான் சொன்னதைக் கேட்டு அகத்தீச

முனிவர், முதன் முதலாக தோன்றிய சிவ ஆகமம் முதற்கொண்டு, தடவி வசியம் செய்யும் வித்தை வரையிலும் உள்ள, உயர்ந்த நிலை அடைந்த அனைவரின் ஞான மந்திரத்தையும் கலியனுக்குக் கொடுத்து முடித்து விட்டோம் என்று உறுதிபடச் சொன்னார் அகத்தீசர்.

உலகத்தையே தன் வசப்படுத்தி ஆட்சிச் செய்யக்கூடிய வித்தைகளும், மரணத்தை தடுக்க கூடிய வித்தைகளும் கொடுத்துவிட்டோமே ஈஸ்வரரே! உலகத்தை ஆட்சிச் செய்யும் நேரத்தில் அநியாயமான செயல்களை தவிர, நல்லறம் ஆகிய புண்ணிய காரியங்களை செய்ய மாட்டானே சுவாமி! அவன் செய்கின்ற செயல்கள் எல்லாம் பாதகத்தை ஏற்படுத்த கூடியதாகவே தான் இருக்கும். நீதி நேர்மையாய் செயல்பட கொஞ்சமும் நினைக்கமாட்டான்.

எவராலும் அழிக்கமுடியாத வல்லமை கொண்ட திருமாலின் சக்கரத்தை வைத்து இருக்கின்றான். எந்த நல்லது செய்யும் காரியத்தையும் நினைக்காதக் கேடுகெட்ட கலியன் திருமுடியையும் பெற்று கொண்டான். திருமாலின் சக்கரத்தின் வலிமையும், திருமுடியின் சக்தியும் அவனுடன் இருக்கும் வரை அவனை எவராலும் அழித்துவிட முடியாது என்று கலி நீசனின் நிலையைப்பற்றி, அகத்தீசர் ஈஸ்வரரிடம் விவரமாகக் கூறினார்.

*********

# DAY 7

## கலியரசன் சத்தியம்

என்று அகத்தீசர் இப்படியே தான்கூற
அன்றுஸ்ரீ ரங்கர் ஆண்டியுரு தானாகித்
தலைவிரித்துக் கந்தை சற்றே கலைபூண்டு
சிலையில்லா வெங்கையால் சென்றாரே நீசனிடம்
நீச னிடத்தில் நெடுமால்தான் முன்னேகி
வாசமுடன் வார்த்தை வழுத்தினா ரம்மானை
ஈச னிடத்தில் இறைஞ்சிவரம் பெற்றதிலே
தேச இரப்பனுக்குச் சிறுக ஈ யென்றுரைத்தார்
தாரா தேபோனால் சாபமிடு வேனுனக்குப்
பாராய்நீ யென்று பகட்டினா ரெம்பெருமாள்
அப்போது நீசன் ஆண்டி தனைப்பார்த்து
இப்போது போடா இரப்பனோ டேதுசண்டை
மாயன் வரவேணும் வலுப்பார்த்து விட்டிடுவேன்
பேய னுடனெனக்குப் பேச்சென்ன நீபோடா
என்று அந்தநீசன் இவ்வளமை கூறிடவே
அன்று பரதேசி அவனோடங் கேதுரைப்பார்
பிச்சைக் காரன்தனக்குப் பெலமில்லை யென்றோநீ
அச்சம தில்லாமல் அடமா யிதுவுரைத்தாய்
பண்டாரந் தன்பலமும் பழிநீசா வுன்பலமும்
சண்டையிட்டுப் பார்த்தால் தான்தெரியும் மாநீசா

என்று பண்டாரம் இதுவுரைக்க அந்நீசன்
குன்று கரத்தெடுத்த கோபால ரோடுரைப்பான்
ஆள்படை களில்லாமல் ஆயுதங்க ளில்லாமல்
வேழ்படை களில்லை வெட்டவா ளிங்குமில்லை
தடியில்லை சக்கரமும் தானில்லை உன்கையிலே
முடிவிரித்துக் கந்தை உடுத்தவனோ டுயுத்தமிட்டால்
ஆண்மையில்லை யென்றனக்கு ஆயிழைமா ரேசுவரே
தாண்மைமொழி பேசாதே தலைவிரித்தப் பேயாநீ
மூவர் முதலாய் முப்பத்து முக்கோடித்
தேவரையும் வேலைகொள்ள சிவமூலம் பெற்றிருக்க
ஒன்றில்லாப் பேயனோடு யுத்தமிட்டா லென்றனையும்
நன்றினியப் பெண்கள் நகைப்பார்நீ யப்புறம்போ
என்று அந்தநீசன் இயம்பத் திருமாலும்
நன்றுநன்று நீசா நானுரைக்க நீகேளு
பண்டாரத் தோடே படையெடுத்தா லாண்மையில்லை
என்றேதா னிப்போது இயம்பினையே மாநீசா
பண்டார மென்றும் பயித்தியக் காரனென்றும்
ஒண்டியாய் வந்தவனொடு (யுத்தமிட மாட்டேனென்றும்
பிச்சைக் காரனெனவும் பெரிய இரப்பனென்றும்
கச்சையில்லா னென்றும் கணைகம்பில் லாதானென்றும்
இப்படியே பண்டாரம் என்றிருக்கும் பேர்களுக்கு
எப்படியும் வம்புசெய்வது இல்லையென் றுண்மையுடன்
சத்திய மாகத் தானுரைநீ பார்ப்போமென்றார்
புத்தியில்லா நீசன் புகலுவான் பின்னாலே
பண்டார மென்றும் பரதேசி யானவரைத்
தண்டரளக் கந்தைத் தலைவிரித்த ஆண்டிகளை
அட்டியது செய்யேன் அவரோடு சண்டையிடேன்
ஒட்டியே வம்பு ஒருநாளுஞ் செய்வதில்லை
என்றான்காண் நீசன் எம்பெருமாள் தானுரைப்பார்
நன்றாக இப்படியே அட்டிசெய்ய மாட்டேனென்று
ஆணையிட்டுத் தாவென்று அருளினா ரெம்பெருமாள்
வீணபட நீசன் விளம்புவா னப்போது
ஆரார்கள் பேரில் ஆணையிட வேணுமென்று
பேராகச் சொல்லு பிச்சையெடுப் போனேயென்றான்
அப்போது பண்டாரம் அகமகிழ்ந்து கொண்டாடி
இப்போது நீதான் ஈசன்தனை வணங்கி
வேண்டியே போற வெகுவரங்கள் பேரதிலும்
பெண்டவள் பேரதிலும் பெலமாக இப்போது
ஆண்டி பரதேசி ஆகிவந்த பேர்களையும்
வீண்டிடறு செய்யேன் எனவேநீ யாணையிட்டால்
ஆணைக் கிடறுசெய்து ஆண்டிகளைச் சில்லமிட்டால்
வீணேபோ மென்வரங்கள் வீட்டுப்பெண் ணார்கள்முதல்
பெண்தோற்று நானும் பெற்றவர முந்தோற்று
மண்தோற்று வாழ்வும் மக்கள்கிளை தோற்றுச்
சேனைத் தளந்தோற்று சீமையரசுந் தோற்று
ஆனைப் படைதோற்று அரசுமே டைதோற்று

என்னுயிருந் தோற்று என்கிளையோ டேநானும்
வன்னரகில் போவேன் என்றேவாக் குரைத்திடுநீ
அப்போது நீசன் ஆண்டி யுரைத்தபடி
எப்போதும் மறவேன் இதைமறந்து வம்புசெய்தால்
சொன்னபடி யெல்லாம் தோற்றிறந் தென்னுயிரும்
வன்னரகில் போவேனென்று ஆணையிட்டான் மாநீசன்

விளக்கம்:

கலியரசனின் சத்தியம்

மாயப் பெருமாள் அவரின் மாய தந்திரத்தால் கலியனிடம் சொல்கிறார், நீ சிவபெருமானிடம் கெஞ்சி எல்லா வரங்களையும் வாங்கிக்கொண்டாயே, நீ வாங்கிய வரத்திலிருந்து இரந்துண்ணும் ஆண்டியாகிய எனக்கு சிறிதளவு தா எனக்கேட்டார். நீ எனக்குத் தர மறுத்தாயானால் உனக்கு பயன்படாதப் படிச் சபித்து விடுவேன் என்றார்.

இப்படி வரம் கேட்ட திருமாலிடம் கலி நீசன் பிச்சை எடுத்து உண்ணும் உனக்கு வரம் எதற்கு உன்னிடம் நான் பேசவில்லை நீ இங்கிருந்து சென்றுவிடு. வீண் வாதம் செய்யாதே, என்னிடம் மாயபெருமாள் வரட்டும் என் திறமை அவரிடம் தான் காட்ட வேண்டும். பேயனைப்போல் இருக்கும் இரப்பனிடம் நான் பேசமாட்டேன் என்று கூறினார்.

தன்னிடம் வந்திருப்பது யார் என்று அறிய முடியாத கலிநீசன் இழிவான முறையில் பேசினான். கலிநீசன் பேசியதை கேட்ட திருமால் பிச்சைக்காரனை போல் அவன் முன் நின்று, நான் இரந்துண்டு வாழ்வதால் தானே எனக்கு எந்த வலிமையும் கிடையாது என நினைக்கிறாய். ஆணவத்தால், அதிகாரம் இல்லாமல் பேசுகிறாய். ஆண்டியாக இருக்கின்ற நானும், வரம் பெற்று அதிகாரம் கொண்ட நீயும் சண்டையிட்டு யார் பலசாலி என்று பார்ப்போமா? அப்போதுதான் உன் பலம் எவ்வளவு, என்னுடைய பலம் எவ்வளவு என்று தெரியவரும் என்றார் மாயப் பெருமாள்.

அதை கேட்ட கலிநீசனானவன் கோவர்த்தன மலையை குடையாக பிடித்துக் காத்த சக்திவாய்ந்த கோபாலகிருஷ்ணனை பார்த்து சொல்வான், நீயே தனிமனிதனாய் கையில் ஆயுதம் எதுவும் இல்லாமல், வெறும் கையோடு நிற்கின்றாய். சடைமுடியும் கிழிந்த உடையுமாய் நிற்கின்ற உன்னிடம் நான் எதிர்த்து போரிட்டால் என் கவுரவம் என்ன ஆகும். என்னுடைய வீரத்தை பார்த்து தேவர்களும் தெய்வக் கன்னிகளும் தரக்குறைவாக அல்லவா எண்ணுவார்கள்.

சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூன்று பேர் முதல், தேவலோகத்தில் உள்ள முப்பத்தி முக்கோடித் தேவர்களையும் மற்றும் அனைவரையும் அடிமைப்படுத்தி அடக்கியாள கூடிய மிக உயர்ந்த சிவ மூல சக்தியை பெற்றிருக்கும் என்னோடு எந்த சக்தியும் இல்லாத ஒரு பேயனோடு நான் போரிட்டால் தெய்வகுல பெண்கள் எல்லோரும் சிரிப்பார்கள்.

ஆகையால் நீ இங்கிருந்து போய்விடு என்றான் கலிநீசன். கலிநீசன் தன் நிலைமையை உயர்த்திப் பேசுவதை கேட்ட திருமால் அவனிடம். சண்டை

போடுவது உன் வீரத்திற்கு அவமானம் என்று பேசுகிறாய். அப்படி என்றால் நீ எனக்கு ஒரு உறுதியானச் சத்தியம் செய்து தர வேண்டும்.

நான் பண்டாரத்தோடும், கையில் ஆயுதம் இல்லாதவரோடும், பைத்தியம் போன்றவர்களிடமும் சண்டை போடுவது இல்லை என்று எனக்கு சத்தியம் செய்து கொடு பார்க்கலாம் என்று கேட்டார். எந்த காரணத்தை கொண்டும் நான் அவர்களுக்கு தீமை செய்ய மாட்டேன் சத்திய வாக்குத் தவறாமல் நடப்பேன் என்று என்னிடம் வாக்குத் தரவேண்டும் என்று கூறினார். அறிவுக்கெட்ட கலிநீசன் தனக்கு வரப்போகிற விதியை அறியாமல் வீணாகி போன நீசன் நாராயணனிடம் சவால் விட்டு, நான் யார் யார் பெயரில் சத்தியம் செய்து தந்தால் நீ நம்புவாய் விவரமாகச் சொல் என்றார்.

அதை கேட்ட திருமால் கலிநீசன் அழியப் போகும் நிலையை மனதில் நினைத்து அகமகிழ்ந்து, கலியனே! நீ சிவபெருமானிடம் வாங்கிய சகலவிதமான வரங்ளுடைய பெயரிலும் ஆணையிட வேண்டும். மேலும் உன்னுடைய மனைவியின் பெயரிலும், ஆணையிட்டு தர வேண்டும். ஆண்டியை போன்றவர்கள் பரதேசிகள், பற்றற்ற நிலையில் இருப்பவர்கள், ஆதரவற்றவர்கள், வறியவர்கள், வயதாகியவர்கள் யாவரையும் துன்ப படுத்த மாட்டேன் என்று சத்தியம் செய்தால் போதும் என்றார் பண்டார கோலத்தில் இருந்த நாராயண மூர்த்தி.

வாக்குறுதியின் படி நடக்காமல் சத்தியத்தை மீறிப் பண்டாரம், பரதேசிகளை, சிறுமைப்படுத்தினாலோ, அடிமை செய்தாலோ நான் பெற்ற வரங்கள், மனைவி, நான் பெற்ற வலிமைமிக்க ஆயுதங்கள், எல்லாம் வீணாக இழந்து விடுவேன் என்று சத்தியம் செய்ய வேண்டும். மேலும் என் சிங்காசனத்தையும் இழந்து என் உடலில் உள்ள உயிர் இழந்து, என் சுற்றத்தாரோடு சேர்ந்து கொடிய நரகத்தில் வீழ்வேன் என்று சத்தியம் செய்து உறுதி தர வேண்டும் என்று கோரினார் திருமால் கூறியதை கேட்ட கலிநீசன் பண்டாரக் கோலத்தில் இருந்த நாராயணமூர்த்தியை அறியாமல், ஆண்டி தானே என்று நினைத்து தன்னுடைய வாக்குறுதி ஒருபோதும் மறக்க மாட்டேன் என்றான்.

ஒருவேளை ஞாபகம் இல்லாமல் கெடுதல் செய்தால் நான் உறுதிமொழி செய்துள்ள எல்லாவற்றையும் இழந்து மரணம் ஏற்பட்டு என் உயிர் ஆனது கொடுமையான நரகத்தில் செல்லட்டும் இது சத்தியம் என்று யோசிக்காமல் கொடியக் குணம் கொண்டக் கலிநீசன் உறுதியாய் சத்தியம் செய்தான். மறுபடியும் திருமால் சிவபெருமான் கலியனுக்கு கொடுத்த ஆயுதங்களை இல்லாமல் செய்ய ஒரு தந்திரம் செய்தார்.

எப்படியென்றால் கலியனிடம், சிவபெருமானிடம் பெற்ற அந்த மந்திர சக்தி வாய்ந்த பல கோடி வகையான யுத்தம் செய்யும் கருவிகளை இங்கே வரவழைத்து கொள். அவ்வாயுதங்களை வரவழைக்க கூடிய மந்திரத் தந்திரங்கள் உன்னிடம் இருக்கும் போது எப்போதும் நீ ஏன் கையில் ஏந்தி சுமந்து கொண்டே திரிய வேண்டும். நீ விரும்பியதைக் கேட்டச் சக்கராயுதத்தை அந்த நெற்றிக் கண்ணையுடைய சிவன் தராமல் உன்னை ஏமாற்றி பயன்படாது, சத்தி இல்லாத வெறும் இரும்பு துண்டை சுமந்து கொண்டே இரு என்று தந்துவிட்டார்.

சாதாரணமான இரும்பை கொண்டு செல்வதால் எந்த பலனையும் பெற முடியாது.

**********

# DAY 8

## சக்கராயுதம் பணமாதல்

நல்லதுதா னென்று நாட்டமுற்றுச் சன்னாசி
வல்ல பெலமுள்ள மாநீசா நீகேளு
மந்திரங்க ளாலே மகாகோடி ஆயுதங்கள்
தந்திரங்க ளாலே தான்வருத்த லாகிடுமே
அப்படியே யொத்த அச்சரங்கள் தானிருக்க
இப்படியே ஆயுதத்தை எடுத்துச் சுமப்பதென்ன
நீகேட்ட சக்கரத்தை நிமலனவர் தாராமல்
தொனிகெட்ட வெற்றிரும்பைச் சுமவென்று தந்தார்காண்
இரும்பைச் சுமந்தால் இல்லைகா ணொன்றுபயன்
தரும்பொருள்போ லுள்ள சம்பாத்தியந் தாறேன்
மண்டலங்கள் தேசம் வாழ்வுக ளுண்டாவதற்கும்
கண்டார்கள் மெய்க்கக் கனக திரவியம்போல்
தருகிறே னுன்றனக்குத் தான்வேண்டு நீயெனவே
பருமுறுக் காயாண்டி பகர்ந்தாரே நீசனுக்கு
அப்போது நீசன் அகமகிழ்ந்து கொண்டாடி
இப்படியே தாருமென்று ஈந்தானே சக்கரத்தை
சக்கரத்தை வேண்டி சங்குசரத் தாமன்
மிக்கப் பணமாக்கி மிகுத்தசக்க ராயுதத்தைச்
சபிக்கவே மாயன் சக்கரா யுதங்கேட்கும்
ஜெபிக்கவே சக்கரம் தான்சின்ன பணமாக
நீச னிடத்தில் என்னைப் பணமாக்கி
ஈயுறீரே சுவாமி இப்போது சாபமிட்டு
இப்போ திடுஞ்சாபம் எப்போது தீருமென்று
அப்போது சக்கரமும் ஆண்டியடி போற்றிடவே
கலிமா றும்போது கடருமென்றா ருன்சாபம்
வலியான சக்கரமும் வாய்த்தபண மாகியதே
பணமாகிக் கீழே பறந்து குதித்திடவே
இணமான நீசன் எட்டி யவன்பிடித்துக்
கண்ணில்மிக வொற்றிக் காரிகையாள் கைகொடுப்பான்
பெண்ணே நமக்குப் பெலங்கள்வந்து வாய்த்துதடி
என்று பிரியமுற்று ஈசுரரைத் தான்வணங்கி
மன்று தனில்போக வரந்தாரு மென்றுரைத்தான்
அப்போது தன்னில் ஆண்டியவ ரங்குசென்று
இப்போது இங்கேவைத்து இவன்தான் மொழிந்ததெல்லாம்
தப்பாம லாகமத்தில் தானெழுதி வையுமென்றார்
முப்போது வுள்ள முறைபோலே மாயவரும்
ஆகமத்திற் பதித்து ஆண்டார் துரிதமுடன்
நாகரீக நாதன் நடந்தார்ஸ்ரீ ரங்கமதில்

## கலியுகம்

நீசனையு மூரேபோ என்று நிமலனுந்தான்
ஈயுகிற போது ஏதுரைப்பாள் சத்தியுமே
வன்னச் சிவனாரே மாபாவி கேட்டவரம்
என்னென்ன வாயமதாய் இருக்குதுகா ணுத்தமரே
வலியான மாதே மாநீசன் கேட்டதுதான்
கலியுகம் போலிருக்கு கண்ணமுதே யென்றுரைத்தார்
சிவம்வாய் திறந்து செப்பக் கலியுகமாய்
இதமான தேவர் எழுதினா ரகமத்தில்

## விருத்தம்

கலியுக மெனச்சிவம் கருதிடத் தேவர்கள்
பொலிவுடன் சேர்த்தனர் புராண மீதினில்
சலிவுடன் நீசனும் தரணியில் போந்திட
வலியுள்ள மாயன் ஸ்ரீரங்க மேவினார்

## விளக்கம்:

சக்ராயுதம் பணமாதல்

நான் இந்த ஆயுதங்களை உனக்கு பயன்படும்படி வரன் கொடுக்கக்கூடிய உபயோக பொருளாக்கி வருமானம் வரும்படியாக செய்கிறேன். காண் போர்கள் எல்லாம் அதிசய படுமாறு சொக்கத் தங்கம் போல் மதிப்புடையதாக மாற்றி தருகின்றேன் என்று ஆசை வார்த்தைகள் கூறினார். ஆசை வார்த்தைகளில் மயங்கி போனக் கலியன் பேராசையினால், ஆவலோடு அய்யா நீர் சொன்னபடியே உபயோக பொருளாக மாற்றும் சக்தி உள்ள சக்கராயுதத்தை பண்டாரமாக இருந்த நாராயண மூர்த்தியிடம் கொடுத்தான்.

சக்ராயுதத்திற்கு சொந்தகாரரான திருமாலுடன் இணைந்து சக்கரத்தை வாங்கிக்கொண்டு அதை பணமாக மாறும் படிச் செய்தார். சக்தி நிறைந்த சக்கராயுதத்தை மிகுதியாகப் பணமாக மாறும்படிப் பெருமாள் தீய சக்தியை ஏவினார். அப்போது சக்ராயுதமானதுத் திருமாலை வணங்கி சுவாமி இந்த இடத்தில் என்னை கொண்டு பணமாக மாற்றி கொடுக்கிறீர்களே! அய்யா நான் உங்கள் கரத்தை அலங்கரித்து கொண்டு இருந்தேன். இனி அந்த ஆனந்த வாழ்வு எனக்கு என்றைக்கு கிடைக்கும் அய்யா. ஈவு இரக்கமில்லாத கலி நீசனிடம் கொடுத்துப் பயனில்லாமல் போகும் படி வைத்து விட்டீர்களே! இந்த சாபம் என்றைக்கு தீரும் என்று கவலையோடு பணிவாய் கேட்டது.

சக்கர சக்தியானது திருவடிகளைப் பணிவோடு வணங்கி நிற்க, திருமால் திருவாய் மலர்ந்து அருளுவார், கவலை வேண்டாம் சக்கரமே! கலியுகம் முடியும் வேளை உன் சாபம் தீர்ந்து என் கை சேர்வாய் என்று, கூறினார். இப்போது சக்கரமானது மக்கள் பயன்படுத்தும் பணமாக மாறி எனக்கு உதவும் விதமாக மேலோகத்திலிருந்து பூலோகத்திற்கு பறந்து வந்தது. பணத்திற்கு ஆசை பட்டு நிபந்தனைகளை ஒத்து கொண்ட அந்த முழு மூடன் பேராசை கொண்டு தன் கையால் பணத்தை எட்டி பிடித்துக்கொண்டான்.

கைகளில் பணம் கிடைத்தவுடன் அவனுடைய கண்களில் ஒற்றிக்கொண்டு அவன் ஆசை மனைவியிடம் கொடுத்து நமக்குத் தேவையானதை வாங்கிப் பயன்படுத்தும் பெரிய சக்தி கிடைத்து விட்டது என்று, ஆனந்தம் கொண்டு மனநிறைவோடு பூலோகம் போகவேண்டும் என்று சிவபெருமானிடம் விடைப்பெற வந்தார்கள். சிவபெருமானிடம் கலியனும், கலிச்சியும் வந்து நிற்கும் போது திருமாலும் அங்கே வந்தார். இங்கே நடந்த சம்பவங்களை ஒன்றுவிடாமல் ஆகம கணக்கில் எழுதி வைக்கும்படி சொல்லி விட்டுத் திருமால் ஸ்ரீரங்கம் சென்றார்.ஆகமத்தில் உள்ள முறைகளைப் போலவே சிவபெருமான் தனக்கு கலியனுக்குப் பூலோக வாழ்க்கையை கொடுத்து போகும் படி செய்தார். கலியனும் கலிச்சியுடன் பூலோகம் வந்தார்கள்.

கலியுகம்

பார்வதி தேவியிடம்,சிவபெருமான் திருவாய் மலர்ந்து பூலோகத்தில் கலியுகம் தோன்றியது என்றார். அதை கேட்டத் தேவர்கள் கலியுகம் பிறந்துவிட்டது என்று ஆகமத்தில் எழுதினார்கள்.சிவ காண்டப் புராணத்திலும் சேர்த்தார்கள். மாயப் பெருமாளுக்கு சத்திய வாக்கு கொடுத்த கலியன் வாங்கிய வரங்களை இழந்துவிட்டான். அதுவும் ஆகம புராணத்தில் தேவர்கள் தொடர்ந்து எழுதி வைத்தார்கள். கலியுகத்தில் வந்ததும், திடீரென்று அதிசயம் காணப்பட்டது.

பல மாறுதல்களும் ஏற்பட்டது. நல்லவை எல்லாம் நலமுடன் நாட்டில் இருந்த காலத்தில், நீதி நெறி நிலைத்து நின்றது. தர்மம் தவறாமல் நாட்டு மக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கும் வேளையில் மனதில் வஞ்சகம் நிறைந்த கலியன் பூமிக்கு வந்ததை கண்ட பூலோக ஜீவன்கள் எல்லோரும் கலி முளைத்து பூமிக்கு வந்து விட்டது,நமக்கு இனி பூலோகத்தில் அமைதி இல்லை என்று பறவைகளும் மிருகங்களும் ஊர்ந்து செல்லும் உயிரினங்களும் திண்டாடின. அவைகளின் செயல்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டது.

*********

# DAY 9

நடை

மாயனுக்கு ஆணை மாநீச னிட்டதெல்லாம்
தூய பெருங்கணக்கில் தொகுத்தெகுதி வைத்தனராம்
நீசக் கலியன் நிறைவோன் பதம்போற்றித்
தேச மதில்வரவே சென்றான்கா ணம்மானை
கலியன் கலிச்சி கட்டாய் வருகையிலே
சிலிரெனவே லோகம் திணுக்கிடவே யம்மானை

நல்லவை மறைதல்

தர்மமாய்ப் பூமி தானிருக்கும் நாளையிலே
வர்மமாய் நீசன் வரவேகண் டம்புவியில்

நல்ல பறவை நல்மிருக ஊர்வனமும்
வல்ல வகைநீதம் மாற்றங்கே ளன்போரே
வெள்ளானை வெள்ளை வேங்கையொடு வெண்கடுவாய்
தள்ளாத சற்பம் தலையைந்து கொண்டதுவும்
வெள்ளன்னம் வெண்குயில்கள் வெண்புறா வெள்ளைமயில்
கள்ளமில்லா வெண்சாரை கடியபெல வெண்கருடன்
நல்ல அனுமன் நாடுங்காண் டாமிருகம்
வல்லவெண் நரிகள் வளர்ந்துவரும்வெண் காகம்
ஆளியொடு சிங்கம் ஆனையி றாஞ்சிப்புள்ளும்
வேளிசை வெண்கலைமான் வெண்புள்ளு வெண்ணணில்கள்
மிருகமதில் வெள்ளைகொண்ட மேல்மிருக மானதெல்லாம்
அறியவே குண்டம் அதுநோக்கிப் போயிடவே
பால்நிற மான பட்சிப் பறவைகளும்
மேலாம்பரனார் குண்டம் மிகநோக்கி நாடிடவே
வெண்சாரை யைந்துதலை விசஅரவ மானதெல்லாம்
துஞ்சாத நாதன் துணைதேடி நாடிடுமாம்
முன்னிருந்த சாஸ்திரமும் முறையும்பஞ் சாங்கமதும்
பின்வந்த நீசனினால் போகவழி தேடிடுமாம்
நீசனுக்கு முன்னிருந்த நீதநெறி மானுபமும்
போயகல்வோ மென்று புத்திதனி லெண்ணிடுமாம்
முன்னிருந்த ரத்தினங்கள் முத்துவை டூரியங்கள்
பன்னுமறை சாஸ்திரமும் பாதையது கொண்டிடுமாம்
சங்கு சமூலம் சலக்கண் சலத்தில்விழ
பொங்குநவ ரத்தினமும் போகவழி தேடிடுமாம்
கடல் விளைவெல்லாம் கண்காணா தோடிடுமாம்
தடவரையி லுள்ள தங்கமது மண்கோர்க்க
சிலைகள் பதிகள் தெய்வத்திருச் சமூலம்
அலையுள்ளும் பூமி அதனுள்ளும் போய்மறைய
மாரி மறைய மலர்க்கண் மிகமறைய
ஏரி பாழாக எண்ணினதே யம்மானை
கர்மக் கலியதனால் கடல்கோபித் தேயடிக்க
தர்மந் தலைகவிழ்ந்து தானிருந்து தம்மானை
தருமமெய் நீதமதும் தாரணியில் உர்வனமும்
பொறுமை யுடைய பெரிய மிருகமதும்
நாகமணி தங்கமணி நவரத்தின மாமணியும்
தாகமுள்ள முத்து சாஸ்திர மாமறையும்
நீதத்தோ ரெல்லாம் நீலவண்ணர் சங்குடனே
பாதத்திருக் குண்டம் பாதைவழி தேடிடுமாம்
நடந்தோர்க ளெல்லாம் நாடி வழிவரவே
கடந்தார்கள் வல்ல கலியைவிட்டுக் காடதிலே
காடதிலே செல்ல கனத்தபஞ்ச பாண்டவர்கள்
வாட லுடவாய் வைகுண்டந் தானேக
கண்டாரே தர்மர் கடந்துநின்ற நீதமதைப்
பண்டாரத் தர்மர் பகர்ந்தா ரதினோடு
நாட்டிலுள்ள நீதமெல்லாம் நடந்துகா ணாதேசென்றால்
வீட்டி லுறுதியுள்ள மேல்வீடு காண்பதற்குப்
போவேனோ தர்மம் போனதினால் நாயடியேன்

சேர்வேனோ குண்டம் செய்தர்ம மில்லையென்றால்
என்றுரைக்கப் பாண்டவர்கள் இயல்தர்ம மேதுரைக்கும்
பொன்றுவந்து லோகம் பொய்ப்பூண்ட தானதினால்
எங்களுக் கங்கே இருந்தா லாகாதெனவே
செங்கண்மா லாயனையும் தேடியே போறோமென்றார்
அப்போது பாண்டவர்கள் அன்பாய்ப் பதம்பணிந்து
இப்போது உங்களையும் இழந்துவிட் டிங்கிருந்தால்
கர்மக் கலிமூழ்கிக் காண்பதில்லை குண்டமது
தர்மத் தோடங்கே தான்வருவோம் கண்டீரே
தர்மமும் நீதமதும் தாட்டீகப் பாண்டவரும்
வர்மமில்லாக் குண்டம் வழிநோக்கிச் செல்லுகையில்
மேலான மாமிருகம் வேதக் காராவுகளும்
நாலான மொரு ஐந்து தலையும் நல்ல அரவமதும்
வெண்பட்சி யான மேலான பட்சிகளும்
இன்பட்சி யெல்லாம் எங்கினிப் போவோமென்று
கதறி யழுது கனைத்துநின்றார் காடதிலே
பதறி யழுது பறவை மிருகமொடு
நிற்கு மளவில் நீலவண்ணர் தானறிந்து
பக்குவப் பிராயப் பண்டார மாகிவந்து
ஏதுகா ணீங்கள் இந்தவன வாசமதில்
ஓதிக் கரைய உங்கள்விதி யானதென்ன
செப்போடு ஒத்த திருமால் தனைப்பார்த்து
அப்போது எல்லாம் அழுதழு தேதுசொல்லும்
நீசக் கலியன் நீணிலத்தில் வந்ததினால்
தேசமதி லெங்களுக்குச் செல்லவிருப் பில்லையையா
என்றுரைக்கச் சன்னாசி ஏதுரைப்பா ரன்போரே
நன்றுநன்று கேளும் நான்சொல்ல நீங்களுந்தான்
பாண்டவரைத் தர்மமதைப் பாரநீ தமதையும்
ஆண்ட வைகுண்டம் அடையப்போ மென்றுரைத்தார்
தெய்வக் காராவைச் சிறந்தவெள் ளானைகளை
மெய்வரம்பு கொண்ட மிகுத்த மிருகமெல்லாம்
கும்பக் குருமலையில் கூடியே நீங்களெல்லாம்
சாம்ப சதாசிவத்தைத் தான்போற்றி யுள்ளிருத்தி
நீசன் தனையறுத்து நீதயுகந் தானாள
வாசமுட னேவரவே வரம்வேண்ட நில்லுமென்று
ஐந்தலை நாகமதை அந்தமுனி தானழைத்து
உன்றனக்குச் செய்தி உரைக்கிறேன் கேளெனவே
அலைமுகத்தில் நூற்றொன்று ஆழம் வரைக்கீழே
நிலைதனிலே நின்று நெடியோனை உள்ளிருத்தி
கலியை யழித்துக் கடியதர்ம மாகவேதான்
வலியயுக மாளுதற்கு வைகுண்டா வாவெனவே
நிற்பாய்த் தவசு நீபோவென அனுப்பி
நற்பாக நீங்கள் நற்றவசு செய்யுமென்று
சற்பமதுக்காக சங்குவெள்ளைச் சாரைதன்னை
பற்பக் கிரிதனிலே பைம்பொன்னிறப் பொய்கையிலே
வம்பை யழித்து வாய்த்ததர்ம ராச்சியத்தில்

அன்பரோ டேயரசு ஆளத்திரு மால்வரவே
வேணுமென்று நிட்டை விரும்பிச்செய் யென்றேதான்
ஆணுவ நாதன் அதற்கு விடைகொடுத்தார்
அன்னப்பட்சி யான அதிகப் பறவைகளும்
பொன்னம்பல கிரியில் போய்த்தவசு பண்ணுமென்றார்
சாத்திர மாமறையைத் தானெடுத்து மாமுனியும்
சூத்திர நெஞ்சத்து உள்ளிருத்தி வைத்தனராம்

விளக்கம்:

நல்லவை மறைதல்

கலியனின் கொடுமை தலைவிரித்தாடும் என்ற காரணத்தாலும் கொடுமை நாட்டில் தலைவிரித்தாடும் என்றும் நல்ல முறையில் கள்ளம் கபடம் இல்லாமல் வாழ்ந்து, வந்த உயிரினங்களும் நாட்டைவிட்டு மறைந்தும், ஒளிந்தும் வாழ, மனிதர்களும், மற்ற உயிரினங்களும் சேர்ந்து ஓடினார்கள். இவ்வாறு கலி வந்த பிறகு நல்லவை எல்லாம், கலி யுகத்தில் வாழ மனமில்லாமல் வனவாசம் சென்று கொண்டிருந்தன.

உயிர் பிராணிகளும், நல்ல நீதங்களும் நிலைதடுமாறி விட்டதால், இவை எல்லாம் ஒழிந்து வாழவேண்டும் என்றும் வைகுண்டத்தை காணவும் ஓடிக்கொண்டிருந்தன. அப்போது செல்கின்ற வழியில் நீதி தவறாமல் அஸ்தினாபுரத்தில் வாழ்ந்து வந்த பஞ்ச பாண்டவர்கள், உடல் மெலிந்து ,மனம் சோர்ந்து, முகம் வாடி, வைகுண்டம் செல்வதற்கு நின்றவர்களைப் பார்த்தார்கள்.

பூலோகத்தில் உள்ள நீதங்கள் நாட்டை விட்டு வெளியே போய்விட்டால், வீடுகளில் சிறந்த வீடாகிய வைகுண்டத்திற்கு சென்று எப்படி வீடுபேறு அடைந்து இன்பம் காண்பது? என்று கவலை கொண்டார். தர்ம நீதங்கள் போய்விட்டால் அடியவன் மட்டும் வைகுண்டம் செல்ல முடியுமா? நான் செய்த தர்மமே என்னோடு இல்லை என்றால் எப்படி நான் சொல்வது என்றார். இவ்வாறு பாண்டவர்கள், சொன்னதை கேட்ட தர்மநீதம் கூறுகிறது, கலியன் அவதரித்ததால், உலகம் அழிவை நோக்கி போய் கொண்டிருக்கிறது. பொய்யும் புரட்டும் புகுந்ததால் நாங்கள் வருத்தம் கொண்டு அங்கிருந்து வந்து விட்டோம். இனியும் நாங்கள் அங்கு சென்றால் அங்கு இருப்பது நல்லதல்ல என்று கூறியது.

திருமாலை காண செல்கிறோம் என்று தர்ம நீதங்கள் கூறியதை கேட்ட பாண்டவர்கள், மிகவும் பணிவோடு அவர்கள் பாதங்களை வணங்கி, இனி நாங்கள் நீதங்களாகிய உங்கள் மூவரையும் இழந்து தன்னந்தனியாக இந்த வனத்தில் இருந்தால் எங்களுக்கு சோதனைகள் தான் உருவாகும். கர்ம வினைகள் பெருகி கலியில், மூழ்கும் நிலைதான் உருவாகும். அதன் பிறகு வைகுண்டத்தை காண்பது என்பது முடியாத காரியம்.

ஆகவே தர்ம சிந்தனையோடு நாங்களும் உங்களோடு வந்து விடுகிறோம். எங்களுக்கு கருணை காட்டுங்கள் என்று பணிந்தார் தர்மர் . அது கேட்ட தருமநெறி தவறாத நேர்மையான நாங்களும் சேர்ந்து பெருந்தன்மையோடு நின்ற பாண்டவர்களும் அவர்களின் மனதில் வஞ்சகம், வாது, சூது, கள்ளம், கபடமில்லாமல் வைகுண்டத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

அப்போது உயர் ரக மிருகங்களும், தேவேந்திரனுடைய பசு மாடுகளும், வெள்ளை யானைகளும், எங்கும் பார்க்க முடியாத ஐந்து தலை கொண்ட பாம்புகளும், வெள்ளை மனம் கொண்டப் பாம்பினங்களும், ஒற்றுமையோடு வந்த வெள்ளை நிறம் கொண்ட பட்சிப் பறவைகளும், பல ஜீவ செந்துகளும் சேர்ந்து நாம் இனி எங்கே செல்வோம் என்று கூடி மன வேதனையில் சத்தமாக அந்தக் காட்டில் நின்று வாய்விட்டு அழுதது.

இப்படி நல்ல தன்மையுடைய உயிரினங்கள் அழுததை பார்த்து, நீலநிறம் கொண்ட திருமால் ஞானத்தால் அறிந்து, வயது முதிர்ந்த பண்டாரமாக உருவம் எடுக்க அங்கே வந்து அழுதுகொண்டிருந்த பட்சிகளிடமும் உயிரினங்களிடமும், மற்றவர்களிடமும் நீங்கள் எல்லோரும் இந்த ஆள் இல்லாத வானத்தில் நின்று இறைவனை நோக்கி மன்றாடி அழும்படியாக உடனடியாக உங்களுக்கு என்ன விதி நடந்தது விவரமாய் சொல்லுங்கள் என்று மாய பெருமாள் ஒன்றும் அறியாதது போல் கேட்டார்.

திருமாலை பார்த்து எல்லோரும் வேதனையோடு அழுதவாறு நீதி நேர்மை இல்லாத கலியன் பூலோகத்தில் ஆட்சி செய்ய வந்த காரணத்தினால் பாவம் சூழ்ந்த இந்த பூமியில் எங்களுக்கு வாழ விருப்பம் இல்லை அய்யா என்று கூறினார்கள். அவர்கள் சொன்னதை கேட்ட அவர்களிடம் பண்டார கோலத்தில் நின்ற அய்யா திருமால் , அவர்களிடம் பாண்டவர்களாகிய நீங்களும் தர்ம நீதங்கள் மற்றும் பறவைகள், பாம்புகள் ,பூச்சி இனங்களும் ஒன்று சேர்ந்து என்னுடைய வைகுண்டஅவதாரம் நிகழ வேண்டும் என்று கூறி தவநிலையில் இருங்கள் என்று அனுப்பினார்.

மேலும் தேவலோக பசுமாடுகளையும், வெள்ளை யானைகளையும், நீதி நேர்மையோடும், கோபம், சண்டை இல்லாமல் சாந்தமான குணத்துடன் எல்லா மிருகங்களும் சேர்ந்து சிவபெருமானுக்கு சொந்தமான குருநாட்டு மலைக்கு சென்று சதாசிவம் பாதம் பணிந்து, கலியன் ஆளுகின்றப் பூமியை மறந்து நிம்மதியாய் வாழும் தர்மயுகம் வாழ வரம் வேண்டும் என்று வரம் கேட்டு தவம் செய்யுங்கள் என்றார். பின் அதிசய தன்மை கொண்ட ஐந்துத்தலை பாம்பை அழைத்து, நீ பால் கடலில் சென்று நூற்று ஒரு அடியில் சென்று, தலையை நிமர்த்தி நின்று நெடியோனாகிய திருமாலை மனதில் நினைத்து தவம் செய்யுங்கள் என்றார்.

கலியனுடைய ஆட்சியை முடித்து, சக்தி வாய்ந்த தர்மயுகத்தை ஆள்வதற்கு வைகுண்டத்தில் இருக்கும் திருமாலே வாரும் என்று கடலுக்குள் நின்று நிலை தவம் புரிவாய் என்று கூறி அனுப்பினார். நல்ல பாம்புகளையும் அதோடு துணையாய் வந்த சங்கு போன்ற வெள்ளை நிறம் கொண்டப் பாம்புகளையும் நற்பண்புகளோடு சிறப்பான முறையில் இருந்து மாசற்ற தவசு செய்யுங்கள். பர்வதகிரியில் சுத்தமாக இருக்கின்ற கங்கை நதிக்கரையில் நின்று கலிநிறைந்த தீமையான உலகம் அழிக்கப்பட்டு, நீதி நேர்மையாக ஆள்வதற்கு திருமால் சீக்கிரமாக வருவதற்கு ஒரே நினைவாக தவம் செய்யும்படி கூறினார்.

ஆணவங்களை அடக்கி அன்பானவர்களை அரவணைக்கும் திருமால் சிறந்த அன்னப்பறவைகளை சிவபெருமான் வீற்றிருக்கும் வட கயிலை மலைக்கு சென்று தவம் செய்யுங்கள் என்று அனுப்பினார்.

இப்படியாக திருமால் எல்லோரையும் தனித்தனியாக ஒவ்வொரு இடத்திற்கு சென்று தவநிலையில் இருக்கும் படி அனுப்பி விட்டு அனைத்து சாஸ்திரங்களையும், வேதங்களையும் எடுத்து உலக மகா பெரிய முனிவராகிய திருமால் இந்த உலகத்தை ஆளும் மூலமாக தன்னுடைய நெஞ்சத்தில் வைத்துக் கொண்டார். இப்படி எல்லா சக்திகளையும் தனக்குள் ஏற்று கொண்டு ஆதிநாராயணன் ஸ்ரீரங்கம் செல்ல நினைத்தார்.

********

# DAY 10

கலைமுனி ஞானமுனி தவசு

இருத்திஸ்ரீ ரங்கம் ஏகவென் றெம்பெருமாள்
கருத்தி லுறயிருத்திக் கட்டாய் வருகையிலே
ஞான முனியினொடு நல்ல கலைமுனிவன்
தானமுள்ள மாமுனிவர் தலைகவிழ்ந் தேதவசு
சடைத்து முகம்வாடித் தானிருக்கு மப்போது
திடத்தமுடன் நல்ல திருமா லருகேகி
நன்றியுள்ள மாமுனியே நல்லகயி லாசமதில்
கண்டதுண் டுங்களையும் காட்டில்வந்த வாறேது
அப்போது மாமுனிவர் ஆதி பதம்பணிந்து
செப்போடு வொத்தத் திருமாலே நாங்களுந்தான்
கயிலாச மீதில் கரைக்கண்டர் பாதமதை
ஒயிலாகப் போற்றி ஒழுங்கா யிருந்தவர்காண்
இருக்குமந்த நாளையிலே எங்களிரு பேர்களையும்
தருக்குகந்த ஈசர் தன்னையவர் வருத்தி
மாயன் மேல்பிறக்க மண்ணுலோ கந்தனிலே
காய மிழந்து காணா துருவெடுத்து
மறைந்திருக் கிறாரெனவே வானோர்கள் சொல்வதினால்
சிறந்தபுகழ் மாயவனுக்குத் தேருஞ் சிங்காசனமும்
மண்டபங்கள் மேடை வாய்த்தநீ ராவிகளும்
பண்டையுள்ள நல்ல பைம்பொன்னிறப் பொற்பதியும்
உண்டுகாண் துவாரகா யுகத்திலே யென்றுசொல்லி
கண்டுகொண்டா னானால் கலியனதை யாண்டுகொள்வான்
முன்போய்த் தானீங்கள் உவரிதனை வருத்தி
இன்பமுள் ளவகைகள் எல்லாமதி னுள்ளேவைத்து
வைகுண்ட ரங்கே வந்தா லிதைக்காட்டி
மெய்கொண்ட வுங்கள் இடத்திலே போவுமென்று
அல்லாதே போனால் அக்கினியா லுங்களையும்
இல்லாதே செய்வார் என்றுசொல்லி வாருமென்று
அனுப்பினா ரெங்களையும் அதற்காக இங்குவந்தோம்
துனுப்பாக வாரிதனைச் சொல்லியே சட்டம்வைத்து
ஏகினோங் கயிலை இடைவழியில் மாநீசன்
தாவி வரக்கண்டு தவலோக மேமறைந்து
கர்ம விதிப்பயனால் கலக்க மிகவடைந்து

தர்மச்சிறப் பில்லாது தலைகவிழ்ந் திருந்தோமென்றார்
அப்போது அச்சுதரும் அந்தமுனி தங்களையும்
இப்போது கூட்டி ஏகின்ற அப்பொழுது
கருங்குரங்கு காரானை கரியகடு வாய்புலியும்
இருங்கருட னூர்வனமும் எறும்புஈ மூட்டைகளும்
கள்ளக் கசடுள்ள கரிய மிருகமதும்
கொள்ளைகொண்ட ஊர்வனமும் குசலான பட்சிகளும்
தரந்தரமாய்க் கூடித் தாமே திரளாக
வரவேகண் டெம்பெருமாள் மாமுனியைத் தான்பார்த்து
ஏதேது மாமுனியே இந்த வழிதனிலே
ஈதே தெனவே எனக்கேட்க மாமுனிவர்
நீச னுதிரம் நீதிகெட்ட இம்மிருகம்
வாசமுள்ள பட்சிகளும் மானிலத்தி லூர்வனமும்
பிறந்துதித்து வந்து பேருலகி லம்மானை
சிறந்தறிந்து எம்பெருமாள் செவியிலே கையறைந்து
விலகியே போக வேணுமென் றெம்பெருமாள்
மலகிய மாமுனிவர் மாயனடி போற்றி
எங்களுக் கெங்கே இருக்கவே சொல்வீரென்று
அங்கந்த மாயவரின் அடிதொழுதா ரம்மானை
அப்பொழு தெம்பெருமாள் அந்தமுனிக் கேதுரைப்பார்
இப்பொழுது நீங்கள் ஏகுங்கோ செந்தூரில்
செந்தூர்ப் பதியில் சிறந்தவா ரிக்கரையில்
நந்த கோபால நாராய ணாவெனவே
மாயநீ சக்கலியை வதைசெய்து தர்மமதாய்
ஞாயமுடன் வைந்தர் நாட்டையொரு சொல்லதுக்குள்
பக்கமதில் எங்களையும் வைத்துபதவி தரவேணுமென்று
நிக்கவேதவசு நீலவண்ணர் உண்டெனவே
ஆளவர வேணுமென்று அருந்தவசு பண்ணுமென
வேழமொத்த மாமுனிக்கு விடைகொடுத்தார் மாயவரும்
விடைவேண்டி மாமுனிவர் வேல னுறைந்திருக்கும்
கடலான தற்கரையில் கடுந்தவசு பண்ணினரே
அப்படியே மாமுனிவர் அங்கே தவசிருக்க
இப்படியே மாயன் இசைந்தஸ்ரீ ரங்கமதில்

விளக்கம்:

கலைமுனி ஞானமுனி தவம்

இப்படியே திருமால் கண்ணும் கருத்துமாக பொறுமையோடு நன்மையான காரியங்களை செய்துவிட்டு பெருமையோடு வரும்போது, கல்வியறிவு பெற்ற ஞான முனிவரும் கலைகளில் சிறந்து விளங்கியவரும், தானத் தர்மங்களில் சிறந்து விளங்கிய கலைமுனி இவர்கள் இருவரும் மனம் தளர்ந்தவர்களாகி கலை இழந்து முகம் வாடி கவலையோடு தவநிலையில் இருந்தார்கள். திடமான மனதுடன் வந்து கொண்டிருந்த திருமால் எல்லோருடைய மனநிலைகளை புரிந்துகொள்ளும் தன்மை கொண்டவர் அல்லவா?

ஆகையால் இவர்களிடம் வந்து விவரம் கேட்டார். நன்றி மறவாமல் நல்லப்பண்போடு நடக்கும் முனிவர்களே! நான் உங்களை சிவபெருமான் இருக்கின்ற கைலாய மலையில் அல்லவா பார்த்திருக்கின்றேன். அங்கு இருந்த நீங்கள் இங்கே இந்த வனத்திற்கு ஏன் வந்தீர்கள். முகவாட்டத்துடன் காண காரணம் என்ன? என்று நாராயணமூர்த்தி அந்த முனிவர்களிடம் கேட்டார்.

திருமால் கேட்டதும் மாமுனிவர்கள் அவர் திருவடிகளைப் பணிந்து வணங்கி எம்பெருமானாகிய திருமாலே! நாங்கள் இரண்டு பேரும் சிவபெருமான் திருப்பாதங்களில் மந்திரங்களையும், ஞானங்களையும் துதித்து பாடி மகிழ செய்பவர்கள்.

எங்களை அழைத்து மாய பெருமான் மீண்டும் ஒரு பிறவி எடுப்பதற்காக மக்கள் வாழ்கின்ற பூலோகத்தில் பிறந்து வரவேண்டும் என்பதற்காக அவருடைய திரு மேனியை விட்டுவிட்டு யாரும் பார்க்க முடியாதபடி சூட்சம உடலோடு ஒளிவு மறைவாக இருக்கின்றார் என்று வானலோகத்தார் அனைவரும் கூறுகிறார்கள்.

பேரும் புகழும் பெற்ற அவருக்கு பல்லக்கும், சிம்மாசனமும் அரண்மனையும், கோட்டையும், புனித தீர்த்தமாடும் இடங்களும், உயர்ந்த அலங்கார மேடைகளும் உண்டு. மேலும் முன் யுகத்தில் அவருக்குச் சொந்தமான மின்னுகின்ற அம்பலப் பதியும், துவாபரயுகத்தில் கிருஷ்ணராக பூலோகத்தில் அவதரித்த போது ஆட்சிச் செய்தத் துவாரகையும் கடலுக்குள் உண்டு. கலியன் அதைப் பார்த்து விட்டால் தனக்கு வேண்டும் என்று எடுத்துக் கொள்வான்.

எனவே நீங்கள் கலியன் பார்த்து விடாதபடி கடல் அரசனைக் கண்டு கிருஷ்ணருக்கு சொந்தமானப் பொக்கிஷங்கள் அனைத்தும் கடலுக்குள்ளே இருக்கிறது. அதை மிகவும் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துக்கொள்ளுமாறும் சொல்லச் சொன்னார். என்றும் மீண்டும் வைகுண்டப் பரம்பொருள் வந்தால் இவை எல்லாம் அவருக்குக் காட்டிக்கொடுக்க வேண்டும் என்று கூறினார் .

ஆகவே சிவபெருமான் சொன்னப்படி கேட்க வில்லை என்றால், அவருடைய கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும். ஆகையால் நாங்கள் சிவபெருமான் கூறியதை விபரமாக கூற இங்கு வந்தோம். நாங்கள் வந்த வேலை முடிந்து விட்டது. திரும்பி கைலைக்கு நாங்கள் செல்லுகின்ற வழியில் கலிநீசன் பூவுலகில் தோன்றி குதித்து வருவதை கண்டதால் தவலோகமாகிய கைலாயம் செல்லும் ஞானம் இல்லை.

ஆனால் முன் வினைப் பயனால் இப்படி நடந்து விட்டதே என்றுக் கவலைக் கொண்டுத் தர்ம நெறித் தவறிய கலியன் கண்ணில் பட்டு விட்டோமோ என்று தலை குனிந்துத் தவம் செய்கிறோம் என்றார்கள். எல்லாம் விவரமாக கேட்டத் திருமால் ஞானமுனியையும், கலை முனியையும் கூட்டிக்கொண்டுச் செல்கின்ற நேரத்தில், வழியில் கருமை நிறமுடைய குரங்குகள் யானைகள், கடுவாய், புலிகளுடன் ஊர்ந்து செல்லும் எறும்புகள், கொடிய விலங்குகள், தீமை விளைவிக்கும் பாம்பு, தேள், இவை எல்லாம் தனித்தனியாக பிரிந்து கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தது.

இவைகள் வருவதை கண்ட திருமால் தன்னோடு வந்த வந்துக்கொண்டிருந்த முனிவர்களை நோக்கி இவைகள் இப்படி வருவதற்கு காரணம் என்ன? இவைகள் கருமை நிறமாக இருப்பதற்கு ஏதாவதுக் காரணம் உண்டா என்றுக் கேட்டார். அதற்கு முனிவர்கள் திருமாலிடம் அய்யா இவைகளெல்லாம் குறோணியின் ரத்தத்தில் இருந்து வந்தவை ஆகும் ஆகையால் இப்படி இருக்கின்றன. எனவே நீதி இல்லாத இந்த மிருகங்கள் வரும் வழியாக சென்றால் கலிநீசம் பற்றி கொள்ள நேரிடும் என்று வேறு பாதை வழியாக செல்லலாம் என்று திரும்பினார்.

திருமால் வேறு பாதையில் செல்வதை கண்ட முனிவர்கள் மிகவும் பயந்து திருமாலின் பாதங்களை பற்றி வணங்கியபடி நாங்கள் எங்கே போய் பாதுகாப்பாக இருப்பது எங்களுக்கு ஒரு வழியை சொல்லுங்கள் என்று கேட்டார்கள். இப்படி அச்சம் கொண்ட முனிவர்களின் மேல் கருணை கொண்ட கருணா மூர்த்தியாகிய எம்பெருமான் நாராயணர் உடனே போகவேண்டும் என்றால் திருச்செந்தூருக்கு போங்கள் என்றார்.

நீங்கள் இருவரும் அங்கு சென்று திருச்செந்தூர் பதியில் இருக்கின்ற திருப்பாற்கடலின் அருகில் நின்று அந்த வனத்தில் இருந்த கோபால நாயகனான பெருமானே எங்களுக்கு அருள் புரியவேண்டும். மாயபெருமாள், மாயமான முறையில் பூமியில் வந்து இருக்கின்ற கலியை அழித்திடவும், தர்ம பூமியாக்கி நீதியுடன் வைகுண்டர் பூலோகத்தை ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்ய வர வேண்டும் என்று, மனதை ஒருநிலைப்படுத்தி தவம் பண்ணுங்கள் என்று அருள் வாக்கு அளித்தார்.

திருமாலிடம் அனுமதி பெற்று கொண்ட இவர்கள் இருவரும் முருகப்பெருமான் அருள் புரிகின்ற தலத்தின் அருகாமையில் நாராயணர் பள்ளி கொண்டிருக்கின்றப் பாற்கடலின் பக்கத்தில் வைகுண்டர் வரவுக்காகக் கடும் தவம் செய்தார்கள். நம் அனைவரையும் மனதை ஒருநிலைப்படுத்தி தவம் செய்யுமாறு கூறிவிட்டு மாயபெருமாள் ஸ்ரீரங்கம் நோக்கி போய்க்கொண்டிருந்த போது அந்த வனத்தில் வழிப்பாதையில் மற்றும் ஒரு முனிவரான போகர் என்கிற முனிவரை கண்டார் திருமால்.

************

## DAY 11

### போகமுனி தவசு

போகின்ற வேளையிலே போகனென்ற மாமுனிவன்
தாவு மொருமலையில் தலைசிதறிச் சாகவென்று
வேகித்து மாமுனிவன் விசையாக முட்டுகையில்
ஆகமுற்று எம்பெருமாள் அவனோடங் கேதுரைப்பார்
மலைதனிலே முட்டி மாளவென்று மாமுனிநீ
குலைகுலைந்து நின்றவிதம் கூறுநீ யென்றனராம்
அப்போது மாயவனார் அடிபோற்றி யேதுரைப்பான்

செப்பமுள்ள மாயவரே சீமைதனை யளந்த
மாயவரேநானுமினி மாள்வதல்லா லிங்கிருக்க
ஞாயமில்லை அய்யா நாரா யணப்பொருளே
என்றுரைக்க மாமுனியும் ஏதுரைப்பா ரெம்பெருமாள்
உன்று வசனம் உரையென்றார் மாமுனியை
என்றெம் பெருமாள் இவையுரைக்க மாமுனியும்
அன்று முனிசொன்ன வசனங்கே ளன்போரே
தர்மநீ தமதுவும் தரணிதனில் மானுபமும்
கர்மக் கலியால் கட்டழிந்து போச்சுதையா
நன்மையெல்லாம் நாடுவிட்டு நடந்து மறைந்ததினால்
வன்மம்வந்து வையகத்தில் வளர்ந்த படியாலும்
நானிருந்த நிட்டை நாலிரண் டாகையிலே
மானிபங்கள் தர்மம் மறையத்தான் போனதினால்
என்தவந்தான் வம்பில் இழந்தேனே யென்றுசொல்லித்
தன்தலையைத் தான்சிதறிச் சாகவே ணுமெனவே
மலைதனிலே முட்டி மாண்டுவிட வேணுமென்று
அலைமேல் துயின்ற ஆண்டியோ டேயுரைத்தான்
நல்லதென்று மாயவனார் நல் முனியை கொண்டாடி
வல்லவனே யுன்றனக்கு மாளவென்றால் வேறில்லையோ
கல்லிலே முட்டிக் கண்தவர்ந்து சாவதென்ன
சொல்லுநீ யென்று திருமா லிதுவுரைக்க

மலைப் புதுமை

அப்போது மாமுனியும் அந்தமலைப் புதுமை
இப்போது சொல்லுகிறேன் என்றே வுரைக்கலுற்றான்
வேதா விதித்த மேலான ஆகமம்போல்
நாதாந்த வேதம் நாலுண்டு கண்டீரே
கலியன் பிறந்தபின்பு கட்டான வேதமொன்று
சலிவாகி வேதம் தான்விளங்கா வண்ணமுந்தான்
இளகாமல் கற்போல் இருந்ததுகாண் வேதமது
குழைவான வேதா குறியா யதையறிந்து
கல்வி யிளகாமல் கற்போ லிருந்ததினால்
பல்லுயிர்கள் வாழும் பாரிலொரு பங்காக
மலையாய் வளர்ந்து வைந்தர் வருகையிலே
அலைபோலிளகி அவனிதனில் பாயவென்று
சபித்தார் காண்வேதா தானறிந்து வேதமது
குபிந்தான மான குன்றுபோலே வளர்ந்து
அன்றந்த வேதம் ஆனதினால் நானடியேன்
இன்றென் சிரசை இதிலிடறி மாண்டதுண்டால்
வைகுண்டங் கிட்டுமென்று மாளவந்தே னிம்மலையில்
கைகண்ட வேதக் கருணாகரக் கடலே
என்றுரைக்க மாமுனிவன் எம்பெருமாள் நல்லதென்று
அன்று முனியை அவரோ டுடன்கூட்டிப்

போகின்ற வேளையிலே போகனென்ற மாமுனிவன்
ஏகின்ற வேளை எம்பெருமா ளேதுசொல்வார்
மாமுனியே நீகேளு மாச்சலா யென்னுடம்பு
தாமுனியே யென்றனக்குச் சடைவா யிருக்குதுகாண்
ஆனதால் கங்கைபார்த்து அதிலே குளித்துமிகப்
போனால் சுகமெனவே போகனோ டேயுரைத்தார்

விளக்கம்:

போக முனி தவசு

திருமால் கண்ட அந்த போகன் என்கிற முனிவர் வலிமையான புகழ்பெற்ற மலையில் அவருடைய தலையை முட்டிக்கொண்டு சாக வேண்டுமென்று மனவேதனையோடு உயிரை போக்கி விட வேகமாக மோதி கொண்டிருந்தார். முனிவர் மலையின் மீது மோதுவதை கண்ட பரந்தாமன் அருகில் சென்று மலை மேல் முட்டி மண்டையை உடைத்து மாண்டு போக நினைத்து முடிவு எடுக்க காரணம் என்ன? என்று கேட்டார்.

உடனே அந்த போகமுனிவர் மன ஆறுதல் அடைந்து மாயப் பெருமாளின் பாதங்களை வணங்கி, திருபாதங்களால் அளந்த வாமன ரூபனே! நான் மாண்டுப் போவதைத் தவிர இந்த உலகில் வாழ வழி எனக்கு இல்லை. எனக்கு எந்தவித நியாயமும் இல்லாமல் போய்விட்டது. என் தகப்பனே! என்னைப் பாதுகாக்கும் பரம்பொருளே! என்றதும் போகமுனிவர் கூறியதைக் கேட்ட தகப்பனாகிய மாயப் பெருமாள், நீ மலையில் முட்டி சாக வேண்டும் என்ற உண்மையான காரணம் என்ன என்பதை என்னிடம் விவரமாக சொல் என்றார்.

போகமுனிவர் திருமாலை பார்த்து, நாட்டில் தான் தர்ம நீதி முறைகள் எல்லாம் தவறி, பூமியில் வாழும் மனிதர்கள் மனசாட்சி இல்லாமல், கலியின் மாய்கையால் நீதி ,நேர்மை, ஒழுக்கம், போன்றவை கட்டுப்பாட்டை இழந்து போய் விட்டனர். உலகத்தை பாதுகாக்க நன்னெறிகள் எல்லாம் நாட்டில் இல்லாமல் மறைந்து போய்விட்டது. பொறாமை, சூது, வஞ்சகம், பொய், களவு போன்ற செயல்கள் நாட்டில் பெருகி தலைநிமிர்ந்து விட்ட காரணத்தினால்,நான் பரம சிவனை நோக்கி ஆறு வருட காலம் தவ நிலையிலிருந்தேன்.

ஆனால் மக்களுடைய மனங்களில் சிறிதளவு கூட மாற்றம் ஏற்படவில்லை. அவர்களிடம் சிறிதளவு கூட தர்ம சிந்தனை இல்லாமல் போனதால் எல்லா நீதங்களும் மறைந்துவிட்டன. ஆதலால் நான் ஆறு வருடம் தவம் இருந்தும் அந்த தவத்திற்கு பலன் இல்லாமல் போய் விட்டது. என்னால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை. எனவே தான் என்னுடைய தலையை இந்த மலையில் முட்டி என் உயிரை விட்டுவிட நினைத்தேன் என்று கூறினார். மாயப் பெருமாள் அதுக்கேட்டு நல்ல உள்ளம் கொண்ட முனிவரே! தவம் செய்து வலிமையான சக்தியோடு இருந்த உமக்கு சாகவேண்டும் என்றால் வேறு வழி இல்லையா மிக கொடுமையான முறையில் இந்த முடிவுக்கு வர என்ன காரணம்? சொல் என்றார்.

மலை புதுமை

போக முனிவர் கூறுகின்றார், ஏனென்றால் அந்த மலை அற்புதமானது, அதன் அற்புதத்தை சொல்கிறேன் கேளுங்கள் என்று சொல்ல தொடங்கினார். உலகம் தோன்றியபோது பிரம்மதேவரால் உருவாக்கப்பட்ட மிக உயர்ந்த நிலையை கூறும் வேத ஆகமம் ரிக்-யசுர்-சாம-அதர்வணம் ஆகும். அதைப்போல் ஒழுக்க நெறியை பற்றி கூறும் நான்கு வேதங்கள் உண்டு. அது உமக்கு தெரிந்த ஆயுள் வேதம், அருந்த வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம் என்பது.

கலியன் பூலோகத்தில் தோன்றியப் பிறகு ஒழுக்கநெறி போதிக்கின்ற வேதம் ஒன்று இருந்தது. அது இந்த கலி உலகத்தின் மேல் வெறுப்படைந்து யாருக்கும் பயன்படாமல் இருக்க வேண்டும் என்று நினைத்து செயல்படாமல் கல்லைப் போல் உறுதியாக பயனற்ற நிலையில் வேதம் காணப்படுகின்றது. பிரபஞ்சத்தை நிர்வகிக்கக் கூடிய பிரம்ம தேவர் தன் ஞான அறிவால் அறிந்து, ஒழுக்கநெறி உபதேசிக்கும் கல்வி நிறைந்த வேதம் பயன்படாமல் இருந்த காரணத்தினால், இதுவரையிலும் பின்பற்றப்பட்டு வந்த வேதங்கள் எல்லாம் எதற்கும் பயன்படாமல் கல்லாகி போய் விட வேண்டும் என்று சபித்தார்.

மேலும் கலியழிக்க நாராயண மூர்த்தி வைகுண்டமாக வருகின்ற போது கடலின் அலைபோல் பொங்கி உருண்டோடி பூமியில் பாயுந்தோட வேண்டும் என்று வேதங்கள் அறிந்தப் பிரம்மாச் சபித்து விட்டார்.அதனால் வேதங்கள் நன்றாய் அறிந்து கொண்டு மிகவும் கோபம் கொண்டு ஒரே நிலையாக எந்த அசைவுகளும் இல்லாமல் மலைபோல் வளர்ந்தது. அன்றைக்கு கலியுகத்தில் கண்ட வேதம் மலைப் போல் ஆன காரணத்தால் அடியேனாகிய நான் இப்போது என்னுடைய தலையை இந்த மலையில் மோதி உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு எடுத்தேன்.

இந்த மலையில் மோதி நான் இறந்தேன் என்றால் என்னுடைய உயிர் வைகுண்ட லோகத்தில் போய் திருமாலிடம் செல்லும் என்று நினைத்து இந்த மலைக்கு வந்தேன் என்று, வேதங்கள் நன்றாகக் கற்று உணர்ந்த கருணைக் கடலான காருண்யச் சீலரிடம் தாழ்மையோடுப் போக முனிவர் கூறினார். இவ்வாறு இந்த மலையின் புதுமையையும் அதன் பெருமையையும் கூறியப் போக முனிவரைப் பாராட்டி அவருக்கு ஆறுதல் கூறித் தன்னோடு அழைத்துக் கொண்டு அய்யா நாராயணர் ஸ்ரீரங்கத்திற்கு புறப்பட்டார்.

******

# DAY 12

சலந்தவசு

அப்போது நல்ல அருள்கொண்ட மாமுனிவன்
இப்போது மாயவரே இதோ தெரியுகின்ற
அருணகிரி மலையில் அருவியொன் றுண்டுமையா
கருணை யிரங்கினதால் காட்டியே தாறேனென்றான்
நல்லதுதா னென்று நல்ல முனியோடே
வல்ல திருமேனி வாவிதனைக் கண்டார்காண்
கண்டு திருமேனி கனத்தநீ ராவிதனில்
சென்றிறங்கி மேனிதனில் செலங்கோரி விட்டிடவே
ஆவி தனிலிறங்கி அச்சுதனார் நின்றிடவே
தேவி யொருபெண் செலமெழுந்து மாயனையும்
வந்து பணிந்திடவே மாயனதைப் பார்த்துச்
சந்துபயில் மாமுனியே தண்ணீரைக் காணாமல்
பெண்ணாக வந்த புதுமையென்ன மாமுனியே
கண்ணான மாமுனியும் கட்டுரைப்பா னம்மானை
எண்ணாத தெண்ணி ஏதுரைப்பான் மாமுனியும்
பெண்ணோடு கேட்டால் புதுமை யதுதெரியும்
என்றுரைக்க மாமுனியும் ஏந்திழையோ டேதுரைப்பான்
நன்றுநன்று பெண்ணேநீ நதியா யிருந்ததுவும்
பெண்ணாக வந்ததுவும் பேசுநீ ஒண்ணுதலே
தண்ணீராய் நின்ற தார்குழலா ளேதுரைப்பாள்
அய்யாவே நானும் ஆதிகயி லாசமதில்
மெய்யாக ஈசுரர்க்கு வேலையது செய்திருந்து
வருகின்ற வேளையிலே மனங்குழறி நானடியாள்
அரையில் கலைபூணாதுஆவியிலே சென்றிறங்கிக்
குளித்தே னதையும் கொன்றையணி வோனறிந்து
அழித்தே யெனையும் ஆவிபோலே படைத்தார்
படைக்கும் பொழுதில் பரமனோ டிச்சாபம்
கடருவதெப் போதெனவே கறைக்கண்ட ரோடுரைத்தேன்
ஆவியாய் நீகிடந்தால் அச்சுதனா ரங்குவந்து
தாவிக் குளிக்க சாபமது மாறுமென்றார்
என்றுரைக்கப் பெண்ணாள் எம்பெருமா ளேதுரைப்பார்
அன்றந்தப் பெண்ணதையும் ஆகமப் போகனையும்
நானாண் டிருந்த நல்லதுவா பரயுகத்தில்
தானாக ஆண்டு தானிருக்கு மப்பொழுதில்
சூரிய வொளிகாந்தம் துலங்கும்வை டூரியத்தில்
வீரிய மான வெற்றிவிரு துக்குடையும்
தங்கப்பொன் னாயுதமும் தளிருநிறச் சக்கரமும்
பங்கமில்லா முத்துப் பவள நிறக்குடையும்
கட்டான வைரக் கற்கோட்டை வாவிகளும்
மட்டான செம்பவள வைரக்கால் மண்டபமும்
உண்டுகா ணத்தனையும் உடனேபோய் நீங்களுந்தான்
என்றுநான் வருவேன் இதுவரைக்குங் காத்திருங்கோ

நான்வந்த போது நல்லகதி யுங்களுக்குத்
தான்தருவேன் போகுமெனத் தங்களிரு பேர்களுக்கும்
விடைகொடுத்து ஸ்ரீரங்கம் மேவி யவரிருக்கத்
திடமுடனே போகமுனி தேவி சலமடவும்
வந்தந்த மாயவரின் வாழ்வெல்லாங் காத்திருந்தார்
சென்றந்த மாயவனார் ஸ்ரீரங்கமே யிருந்தார்

விளக்கம்:

சாலமாது தவசு

இருவரும் நடந்து சென்றிருக்கும் வேளையில் நீதிநெறி தவறாத போக முனிவரிடம் எம்பெருமான் நாராயணர் போக முனியே என்னுடைய உடல்நிலை மிகவும் சோர்வாக இருக்கிறது. எங்கேயாவது நீர்நிலைகள் இருந்தால் நீராடி ஓய்வு எடுத்து செல்லலாம் என்றார். சோர்வான உடலில் தண்ணீர் பட்டால் சுறுசுறுப்பை உண்டாக்கும். நீராடினால் உடம்பும் ஆரோக்கியத்துடன் இருக்கும் என்றும் முனிவரிடம் சொன்னார் நாராயணர்.

உடனே நல்ல காரியங்களைச் செய்யும் நோக்கம் கொண்ட மகா முனிவர் தான் நினைத்த காரியத்தை மாயமாகச் செய்கின்ற மாயப் பெருமாளிடம் பெருமாளே! அதோ தெரிகின்ற அருணகிரி என்று அழைக்கப்படும் மலையில் தண்ணீர் அருவி இருக்கிறது. அய்யா நான் உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன். அங்கு போய் நீராடித் திருமேனியில் உள்ள சோர்வைப் போக்கலாம் வாருங்கள் என்றார் போக முனிவர்.

ஞான சக்திகளை கொண்ட திருமால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்றுத் தண்ணீரைக் கண்டுத் தன்னுடைய உடலைக் குளிர்ச்சியடையச் செய்ய நீரில் இறங்கி மேனியில் தண்ணீரை ஊற்றிக் கொள்ளும் போதுத் தண்ணீராய் நின்ற அந்த தடாகத்தின் உள்ளிருந்து நீர் மறைந்து பெண்ணின் உருவ அமைப்பைப் பெற்று மாயப்பெருமானாகிய நாராயண மூர்த்தியின் பாதத்தை பணிந்து வணங்கி நின்றாள் .

அதைக்கண்ட பெருமாள் எல்லாம் அறிந்த பரம்பொருள் ஒன்றும் தெரியாதது போல் முனிவரே! நீர் நிலையில் இருந்த தண்ணீர் காணாமல் மறைந்து பெண்ணாக தோன்றிய மர்மம் என்ன? இந்த அதிசயம் நடக்க காரணம் என்ன? இது புதுமையாக இருக்கிறதே! இதற்கு விளக்கம் தெரிந்தால் சொல்லுங்கள் போக முனிவரிடம் கேட்டார்.

போகமுனிவர் சிந்தித்து பார்த்தார். விவரம் தெரியவில்லை. எதுவும் புலப்படாது குழப்பமடைந்து, திருமாலிடம் அய்யா இதற்கான காரணம் புரியவில்லை என்றாலும், இந்த அதிசயத்தை அந்த பெண்ணிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்று கூறினார். உடனே நாராயண மூர்த்தியும் சம்மதித்து, அந்த பெண்ணிடம் அழகிய தேவதை போன்று இருக்கும் பெண்ணே! நீ எப்படி இந்த நீர் நிலையிலிருந்துப் பெண்ணாக மாறினாய்? நீர் நிலையில் இருந்து பெண்ணாக மாறிய காரணம் என்ன என்பதை அவரிடம் சொல் என்று போக முனிவர் கூறினார்.

உடனே தண்ணீராய் இருந்தவள் பெண்ணாக மாறிய விதத்தையும் தண்ணீராய் நின்ற தன்மையையும் கூற தொடங்கினார். அய்யா எனதுப் பெயர் தேவி சாலமாது ஆகும். நான் பரமசிவனிடத்தில் உண்மையான முறையில் சிவனுக்குப் பணிவிடைகள் செய்து வந்தேன். அந்த நேரத்தில் மனக் குழப்பத்தால் அடியவளாகிய நான் இடுப்பில் ஆடை இல்லாமல் அரைகுறையாக நீரில் இறங்கி நீராடினேன். அதைக் கொன்றை மலர் சூடுகின்ற சிவபெருமான் அறிந்து நீர்நிலையை அசுத்தப்படுத்தியவள் என்று, என்னுடைய பணிவிடையை ஏற்காமல், நான் ஆடையில்லாமல் நீர்நிலையில் இறங்கிய குற்றத்திற்காக என்னை அழித்து நீராக பிறக்க சாபம் இட்டார்.

நான் சிவபெருமானை பணிந்து செய்த தவற்றை மன்னிக்கவேண்டும் சுவாமி! என்று பணிந்து கேட்டும் பயனில்லை. அப்போது நான் சிவபெருமானிடம் எனக்கு இந்த சாபம் எப்போது தீரும் என்று கேட்டேன் . நான் மீண்டும் எப்போது நல்ல நிலையில் விமோசனம் அடைந்து வருவேன் என்றும் கேட்டேன்.

அப்போது சிவபெருமான், என்னிடம் நீ தண்ணீராய் மாறியிருப்பாய். பச்சைமால் நாராயணர் அதில் இறங்கி நீராடுவார். அப்போது நீராக இருக்கும் உன் உடம்பில் அவர் பாதம் பட்டதும் உன்னுடைய சாபம் தீர்ந்து பின் மீண்டும் பழைய நிலையாகிய பெண்ணுருவை பெறுவாய் என்றார்.

இவ்வாறு அந்த பெண்ணாகிய சாலைமாது சொன்னவுடன், நாராயணர் அந்த பெண்ணையும், ஆகம விதிகளை கற்ற போக முனிவரையும் பார்த்து, இதற்கு முன்னால் என்னுடைய துவாபரயுகத்தில் கிருஷ்ணராக அவதாரம் எடுத்தபோது நான் ஆண்டுகொண்டிருந்த விலைமதிக்க முடியாத சூரிய ஒளி போல் பிரகாசமான ஒளி வீசும் புகழ்பெற்ற வைடூரியத்தாலான, வெற்றி சின்னமாகிய முத்துக் குடையும், பொன்னால் செய்யப்பட்ட சங்கு, சக்கரமும், நன்றாக விளைந்த முத்துக்களால் அமைந்த பவளம் கோர்த்த வெண்ணிறக் குடையும் , வைரக்கற்களால் அலங்கரிக்கப்பட்ட கோட்டைகளும், மற்றும் அதில் அமைந்துள்ள தெப்பக்குளங்கள், சிவப்பு நிறப் வைரக்கற்கள் சேர்த்து கட்டப்பட்ட மணிமண்டபமும், அழகு செய்யப்பட்ட கோட்டைகளும் கடலுக்குள் இருக்கிறது.

நான் கலியழித்துத் தர்மயுகம் தோன்றும் போது மீண்டும் ஆட்சி செய்ய வருவேன். அதுவரையிலும் பொறுமையாய் அங்கு இருந்து கவனித்து கொள்ளுங்கள் என்றார்.

கலியுகம் முடிந்துத் தர்மத்திற்கு முடிசூடும் பெருமாளாக நான் வந்து, உங்களுக்கு மரணம் இல்லாத வாழ்க்கையை நிரந்தரமான தருவேன். எனவே இருவரையும் துவரயம் பதிக்குச் செல்லுங்கள் என்று இருவருக்கும் அனுமதி கொடுத்து அனுப்பிவிட்டு, திருமால் பூலோக வைகுண்டம் ஆகிய ஸ்ரீரங்கத்திற்கு சென்றார். அய்யா கூறிய அறிவுரையைக் கேட்டப் போக முனிவரும், தேவிசாலமாதும் திடமான மன உறுதியுடன் இறைவன் ஆணையை ஏற்றுக்கொண்டு கடலுக்குள் இருக்கின்ற துவரயம்பதிக்கு வந்து கிருஷ்ண பரமாத்மாவின் உடைமைகளைப் பாதுகாத்தனர்.

***********

# DAY 13

மாயன் ஸ்ரீரங்கம் வாழ்ந்திருக்கு மப்போது
மாயக்கலி செய்த மாயங்கே ளன்போரே
ஈசன் சக்தியையும் இணைபிரித்து வைத்தான்
தேசக்கலி சாதிதனைப் பதினெட்டாய் பிரித்து வைத்தான்
சாத்திரத்தை யாறாய்த் தான்வகுத்து வேதமதை
மாத்திரமே நாலாய் வகுத்தனன்கா ணம்மானை
நட்சேத் திரத்தை நல்லிருபத் தேழாகப்
பொய்ச்சேத் திரமாய்ப் பிரித்தான்கா ணம்மானை
கோளொன் பதுக்குக் கூடுபன்னி ரண்டாக
நாளேழு வாரம் நாட்டிவைத்தா னம்மானை
பக்கமது பத்தஞ்சு ஆகப் பவம்பிரித்து
தக்கமது லோகம் தானாண் டிருக்கையிலே
மாந்திரத்தால் செய்த வறுமைகே ளன்போரே
பாந்தள்வாய்க் கட்டி பரிசுகெட ஆட்டிடுவான்
சந்திரனை மங்கவைப்பான் சமுத்திரத்தைப் பொங்கவைப்பான்
மந்திரத்தால் தெய்வமதை மாடுபோல் வேலைகொள்வான்
கற்பைக் கலக்கிடுவான் கன்னி யழித்திடுவான்
வெற்பைத் தகர்த்திடுவான் வெடியைத் தடுத்திடுவான்
ஆண்பெண்கள் தம்மை அலைச்சலது செய்திடுவான்
கோண்பிரித்துக் கட்டிக் குடிகெடுப்பான் மானிடரை
பசுவை யடைத்துப் பட்டினிகள் போட்டிடுவான்
கசுவை மறைத்திடுவான் கண்ணைக் கெடுத்திடுவான்
மிருகமதைக் கட்டி இரையிடாக் கொன்றிடுவான்
கருவை யுருவழிப்பான் கன்னி சிறைவைப்பான்
மானிடர்க்குக் குட்டம் வருத்தியே கொன்றிடுவான்
வீணிலே மானிடரை விசமடக்கிக் கொன்றிடுவான்
மாரிதனை மறைப்பான் வருத்தவென் றாலழைப்பான்
ஏரிதனை வெட்டி இயலழியச் செய்திடுவான்
அடப்பமிடத் தாயை ஆளாக்கி வைத்திடுவான்
குடைப்பிடிக்கப் பிதாவைக் கொண்டிடுவான் வேலையது
பேயை வருத்திப் பூசை மிகக்கொடுத்து
தேயமதில் மானிடரைச் செத்திறக்க வைத்திடுவான்
கடலதுக்கும் மாமலைக்கும் கற்கோட்டை தாண்டவிட்டுத்
தடவரைக ளெல்லாம் தகர்த்துப் பொடிப்படுத்திப்
பூலோகத் தேசம் புவனமெல் லாம்பரந்து
மேலோக மெல்லாம் மிகப்பரந்தா னம்மானை

விளக்கம்:
மாயக்கலி செய்த மாயம்

மாயப் பெருமாள் ஸ்ரீரங்கத்திற்கு வந்து ரங்கநாதசுவாமியாகிக் காட்சிக் கொடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் பூலோகத்தை ஆக்கிரமித்துக் கொண்ட

கலியனால் நடந்தது என்னவென்றால்,பல தத்துவங்களை கூறுகின்ற வேத சாஸ்திரங்களை ஆறு பிரிவாக பிரித்தான். பிரம்மாவின் வேத ஆகமமாகிய ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களை அவன் தேவைக்காக நான்காய் தனித்தனியாக பிரித்தெடுத்தான்.

வானத்தில் மின்னும் நட்சத்திரங்களாகிய விண்மீன்களை 27 ராசி பார்க்கும் நட்சத்திரமாக மாற்றி விட்டான். அவற்றின் நிலையற்ற தன்மையை கூறும் வகையில், பல வீடுகளாகப் பிரித்து, பல பெயர்களையும் வைத்தான். நவக்கிரகங்கள் என்று ஒன்பதாக பிரித்து அவற்றுக்கு இருப்பிடமாக 12 ராசிகள் என்று உருவாக்கினான்.

ஏழு நாட்கள் என்பது ஒரு வாரம் என்று நிலைநிறுத்தி திங்கள், செவ்வாய், புதன் ,வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு என்று தனித்தனிப் பெயரை இட்டான். ஒரு பகுதிக்கு பதினைந்து நாட்கள் என்றும், இதை அமாவாசை என்றும் , மறுபகுதிக்கு பதினைந்து நாட்கள் என்றும் , இதைப் பவுர்ணமி என்றும், முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம் என்றும் இரு நிலைகளாக்கினான்.

இப்படி பல மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் போது, அவன் வாங்கிய வரத்தின்படி , பல மாயக் கலைகளை கற்றுக் கொண்டான். பல தீமையான மந்திர சக்தியை பயன்படுத்தி காட்டு மிருகங்களையும், பாம்புகளையும், வாயைக்கட்டி அதன் இயல்பான பண்புகள் மாறும் படிக் கெடுதல் செய்தான். வளர்பிறை, தேய்பிறை என்று ஒளியைக் கூட்டிக் குறைப்பான். கடலைப் பொங்கி எழச்செய்வான். மந்திரத்தின் மூலம் காவல்தெய்வங்களைச் செயல் இழக்கச் செய்து, கடினமான வேலைகளைச் செய்ய ஏவிவிடும், ஏவல் செய்வான்.

பெண்களின் கற்பு நெறியை இழக்கச் செய்யும் மந்திரத்தைப் பயன்படுத்தி பெண்களின் கற்பைச் சூறையாடுவான். பருவப் பெண்களின் கன்னித்தன்மையை மந்திரத்தால் அழித்திடுவான். கருவாய் இருக்கின்ற சிசுக்களை வயிற்றில் வைத்தே மாயம் செய்து அழித்திடுவான். பெரிய மலைகளை மந்திர சக்தியால் வெடித்து சிதற வைப்பான்.

ஆண்களையும் பெண்களையும் நிம்மதி இழந்து போகும் படி பலத் துன்பங்களை கொடுத்து அலைய வைப்பான். ஒற்றுமையோடு வாழும் மக்களுக்குப் பல கெடுதல்களைச் செய்துச் சேர்ந்து வாழ விடாமல் கேடு செய்வான். பால் கொடுக்கும் பசு மாட்டிற்கு ஆகாரம் போடமாட்டான். தாகத்திற்கு தண்ணீர் கொடுக்க மாட்டான்.

அரும் பசிக்கு அன்னம் இடமாட்டான். நண்பனுக்கு உதவும் நண்பர்களையும், உறவையும், நட்பையும் இரண்டாக பிரித்து வைத்திடுவான். வாய் பேசாமல் வாயைக் கட்டி மந்திரச் சக்திகளை ஏவி இறக்கச் செய்வான். குஷ்டம் போன்றக் கொடிய நோய்களையும் மக்களுக்கு மந்திரத்தால் உண்டாக்கி மக்களைத் துன்புறுத்திச் சாகடிப்பான். மக்களின் மேல் வீண்பழிச் சுமத்தி அதற்குத் தண்டனையாக விஷம் கொடுத்துக் கொன்று விடுவான்.

வருண பகவானை அழைத்து வாக்கு வாதம் பேசி மழைப் பெய்ய வைப்பான். மழை பெய்து கொண்டிருக்கும் போது மழை பெய்ய வேண்டாம்

எனத் தடுத்து நிறுத்திவிடுவான். விதண்டாவாதம் செய்து ஏரி, குளங்களை வெட்டி அழித்து தண்ணீரை வீணாக்கிடுவான். பெற்றதாய் தகப்பனை மதிக்காமல் அடிப்பணியச் செய்வான்.பேய் பிசாசுகளை வரவழைத்து அதற்குச் சக்தியைக் கொடுத்து மக்களை சாகடிப்பான். காலங்காலமாக செயல்பட்டுக் கொண்டிருந்த விதிமுறைகளை எல்லாம் ஒழுங்குமுறைத் தவறச்செய்து அழித்திடுவான். மந்திர சக்தியை பயன்படுத்தி ஊர்விட்டு ஊர் பறந்துச் செல்வான்.

கூடுவிட்டு கூடுபாயும் பல குசல வித்தைகள் புரிவான். இப்படியாக சிவபெருமானிடம் வாங்கிய சக்தி மிகுந்த வரங்களை மந்திர தன்மையால் மோசமானத் தீய வழிகளில் பயன் படுத்தினான்..

கலியன் செய்த மாய மந்திரச் சக்திகள் எல்லா இடங்களிலும் பரவியதால், சிவலோகத்திலும்சிவபெருமானுக்கு பணிவிடைசெய்து கொண்டிருந்தவர்களும், தேவர்களும் சிவனுக்குப் பணியவில்லை. தவலோகத்தில் இருந்த தவ முனிவர்கள் தவம் செய்ய முடியாமல் தவ நிலையும் தவறியது. பதினான்கு உலகங்களும் தடம் புரண்டு வழி மாறி போனது. சிவலோகம், பிரம்மலோகம், விஷ்ணுலோகம் ஆகிய மூன்று உலகங்களும் நீதி நெறிமுறைகளை தாண்டி கட்டுப்பாடு இல்லாமல் போனது. இந்திரலோகம் கூட ஒழுங்காக செயல்பட முடியாமல் நிலை குலைந்து போனது.

*******

# DAY 14

கயிலை யெமலோகம் கரியதெய்வ லோகமெல்லாம்
அகிலமே ழும்புரண்ட அதிசயங்கே ளன்போரே
சிவந்தா னினைத்தால் செல்லார்கள் தேவரெல்லாம்
தவந்தா னிளகித் தான்வந்த தாலேதான்
மூவர்க ளூரும் முறைமை மிகத்தவறி
தேவர்க ளூரும் தியங்கிமிகத் தான்புரள

நந்திவரவு

தெய்வலோ கமுறைமை திசைமயங்கித் தான்புரள
மெய்கொண்ட லோகமெல்லாம் மிகமயக்க மானதினால்
ஈசுரனா ரப்போ ஏதெனவே தான்வெகுண்டு
வீசுபுகழ் நந்திதனை விரைவாய் வரவழைத்து
மாமுனி யேகயிலை வரம்பழியக் காரணமேன்
ஓமுனியே நீயும் உள்ளதெல்லாஞ் சொல்லெனவே
என்றந்த நந்தியோடு ஈசுரனார் தான்கேட்க
அன்றந்த மாமுனியும் அரனா ரடிதொழுது
அப்போது நந்தி அரிஅரனையும் போற்றி

செப்போடு ஒத்தசிவ சக்தியையும் போற்றி
நல்லதுகா ணீசுரரே நம்மள்தனக் கிங்கேதான்
செல்லாது இங்கிருந்தால் சிவனே யெனத்தொழுது
பூலோக மேழும் பொன்னுலோக மேழும்
தாலோக முதலாய்த் தவலோ கம்வரையும்
ஈரேழு லோகம் இருபுத்தி யானதெல்லாம்
பாரெல்லா மிப்படியே பரந்து இருப்பதெல்லாம்
சொல்லவே ணுமென்றால் சிவகயிலை விட்டேநாம்
நல்லபர லோகமதில் நாம்போவோ மீசுரரே
என்றந்த ஈசுரரை இறைஞ்சி முனிதான்கூட்டி
அன்றந்த மாமுனியும் அரனாருந் தானேகி
சென்றார் பரலோகச் சீமையிலே வந்திருந்து
வண்டாடுஞ் சோலை வைடூரியக் கோயில்
கோவிலவர் புக்கி குருவை மிகப்போற்றி
ஆவலுடன் மாமுனியும் அருளுவா ரம்மானை
நல்லபர மேசுரரே நாடுதடு மாறினதை
எல்லாம் நீர்கேட்க எடுத்துரைப்பே னென்றுமுனி
மாமுனியு மீசுரரை வணங்கிப் பதங்குவித்து
ஓமுனியும் நன்றாய் உரைப்பார்கா ணம்மானை
கேட்டீரோ ஈசுரரே கேடுவந்த செய்தியெல்லாம்
தீட்டுகிறே னென்று செப்புவா ரன்போரே
மாயன் வைகுண்டம் மறையவென்று பொய்ச்சடலக்
காய மிழந்து காணா துருவெடுத்து
ஏகி வரும்வழியில் ஏந்திழையாள் தெய்வகன்னி
தாவிச் சுனையாடித் தாங்கள்நிற்கும் வேளையிலே
கண்டந்த மாயன் கன்னியர்மே லிச்சைகொண்டு
பண்டந்த யோகமுனி பச்சைமால் தன்றனக்கு
மேலோகத் தார்களெல்லாம் விஷ்ணுவின் நாதமதில்
பூலோகந் தன்னில் பிதிராகு வாரெனவும்
பிதிரில் தவமிருந்து பிறந்தவழி தன்னையெல்லாம்
சதிராக வந்தெடுத்துத் தர்மயுக மாள்வாரென்று
யோகமுனி யிட்ட உறுசாப மத்தனையும்
லோகமதில் மேலோகப் பிறப்பெல்லாந் தோணவைத்துக்
கன்னி வயிற்றிலுறக் காட்டில் மிகப்பிறந்து
தன்னிக ரில்லாத சான்ரோ ரெனவளர்ந்தார்
வளர்ந்தவர்கள் ராச்சியத்தை வகையாக ஆண்டிருக்க
இழந்த கலிதோன்றி இவன்சென்றா னவ்வுகத்தில்
கலிய னவன்செல்லக் கைமறந் தவ்வுலகில்
பொலிவுள்ள தான தர்மம் பொன்றிச்சே நீதமதும்
முன்னிருந்த சாஸ்திரமும் முறையும் மிகத்தவறி
பின்னுதித்த நீசன் பிரித்தான்காண் வெவ்வேறாய்
ஆனதால் பூலோகம் அழிந்து மிகத்தவறி
ஊன மடைந்தார் உலகிலுள்ள சான்றோர்கள்
தந்திர மந்திரத்தால் சான்றோரைத் தான்மயக்கிப்
பந்தி யழித்ததினால் பத்தினியாள் பெற்றமக்கள்
நாணமிகவடைந்து நாட்டில் பிரிவாகி

ஈனதுன்பமாகி இருக்குமந்த நாளையிலே
ஒண்ணுக்கொண் ணெதிர்த்து ஒத்துமிக வாழாமல்
பெண்ணுக்கு ஆணும் பிரிவு முறிவாகித்
தாய்க்குத்தான் பிள்ளை தாழாம லேபேசும்
வாய்க்குவாய்ச் சொன்னாலும் மங்கைநல்லா ளென்றிடுவான்
பிதாவை மிகநம்பார் புண்ணியமென் றேபாரார்
இதாகவெல்லாம் நீசன் இடறுவரச் செய்ததினால்
ஆனதா லிந்த வழிவழியே யங்குழது
போனதால் நீசம் பொன்னுலோ கம்வரையும்
ஏகிச்சு தையா இடறுநீ சக்கலியும்
கோவிச்சு தையா கொடுங்கலியு மங்கேகி
ஈதல்லால் பின்னும் இன்னுஞ் சிலநாளில்
ஏதெல்லா மாகுதென்று ஈசுரரே பார்த்திருவும்
மாயனை யும்வருத்தி வார்த்தைகே ளாதிருந்தால்
தேய மிருள்மூடிச் சென்றிடுங்கா ணீசுரரே
அப்போது ஈசுரரும் அதற்கேது செய்வோமென்று
செப்பேடு வொத்த சிவனாரும் நொந்திருந்தார்
மாமுனியே மாயவனை வருத்தவென்ன செய்திடுவோம்
ஓமுனியே நீயும் உரையென்றா ரன்போரே

விளக்கம்:

நந்தி வரவு

சிவபெருமான் பதினான்கு உலகத்திலும் நடக்கிற மாறுதலைக் கண்டு என்ன காரணம் என்று அறிய, உலகப் புகழ்பெற்ற சிவனின் காளை வாகனமாகிய நந்தீஸ்வரரை அழைத்தார். அவரிடம் நந்தீஸ்வரரே இந்த கைலாயம் வரம்பு முறைகளை மீறக் காரணமென்ன என்று கேட்டார்?

கைலாயம் வரைமுறைகளை ஓம் என்ற மந்திரத்தை ஜெபமாலை மூலம் அறிந்து சொல்லும் நந்தியே உண்மையான விவரம் என்ன? என்று கேட்டபோது நந்தீஸ்வரர், சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, சுவாமி! நாம் இப்போது கைலையில் இருப்பதற்கு காலம் சரியாக இல்லை. பதினான்கு உலகங்களில் உள்ள நல்ல புத்தியும், அதைக் கெடுக்கும் கெட்ட புத்தியும் எப்படி உருவானது என்று விபரம் தெரிந்து கொள்ள வேண்டு மென்றால், நாம் சிவலோகத்திலிருந்து பரலோகம் போக வேண்டும் என்றுக் கூறினார்.

உடனே சிவலோகத்தை விட்டு சிவபெருமான் நந்தீஸ்வரரை அழைத்துக்கொண்டுப் புறப்பட்டார். சிவ லோகத்தை விட்டு நந்தீஸ்வரரை அழைத்துக்கொண்டு முக்தி அடைந்தவர்கள் மட்டுமே இருக்கக்கூடிய மிக உயர்ந்த நிலையான மோட்ச லோகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே வண்டுகள் மலர்மீது தேனை உறுஞ்சும் நந்தவனத்தில் வெளியே கற்களாலான கோவிலுக்குள் இருவரும் சென்றதும், நந்தீஸ்வரர் , சிவப்பெருமானை வணங்கி, சிவப்பெருமானே! நாட்டில் ஏற்பட்ட துன்பத்திற்கு காரணம் கலியினால் தான். இப்போது இங்கே இந்த நிலை வந்துள்ளது என்பதை கூறி கலியன் தோன்றிய விபரங்களைக் கூறலுற்றான்.

எப்படியென்றால், கிருஷ்ண பரமாத்மா துவாபரயுகத்தை முடித்து விட்டு வைகுண்டம் செல்வதற்காக தன்னுடைய அவதாரத சக்திகளை பர்வதா மலை உச்சியிலேயேப் போட்டுவிட்டு கண்ணுக்குத் தெரியாத சூட்சம உடலை எடுத்துக் கொண்டு செல்லும் போது வழியில் தேவலோக சப்த கன்னியர்கள் அரிகோணமாமலையிலுள்ள அமிர்த கங்கையில் நீராடிக்கொண்டிருந்தார்கள். ஏழுலகத்தார்களையும் பூமியில் பிறக்க வைக்க வேண்டியக் காரணத்தால், அதை அந்தச் சப்த கன்னியர்களின் மூலம் செயல்படுத்த வேண்டும் என்று பல சூட்மங்களைப் புரிந்து சப்த கன்னியர்களின் மூலம் சான்றோர்களை பிறக்க வைக்க எண்ணினார்.

எப்படி என்றால், மேல்லோகமாகிய ஏழு உலகில் உள்ளவர்கள் மகாவிஷ்ணுவின் சக்தியில் பிறப்பார்கள் என்ற விதியும் அமைந்தப் படியால், அவர்களும் பூலோகத்தில் ஆண்மை சக்தி நிறைந்தவர்களாக இருப்பார்கள் என்றும், அந்த ஆண்மை சக்தி நிலையில் தவம் செய்து இறை தன்மையை பற்றி எல்லோரும் மீண்டும் பிறவி எடுப்பார்கள் என்றும், பெயரும் புகழும் பெற்ற மரணமில்லாத வாழ்க்கை அவர்களுக்கு கொடுத்து தன்னோடு சேர்த்து தர்மத்தை ஆட்சி செய்வார் என்றும், யோக முனிவர் இட்ட சாபத்தினாலும் தான், இப்போது இங்கு எல்லா விதத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டது. ஆகையால் பூலோகத்தில் மேல் உலகத்தில் உள்ளவர்களைப் பிறக்க வைக்கும் செயலைச் செயல் படுத்திவிட்டார்.

சப்த கன்னிமார் வயிற்றில் கருவாக உருவேற்றி, அரிகோண மாமலையில் இருக்கின்ற அமிழ்த கங்கை வனத்தில் பிறந்து, தனக்கு நிகர் யாருமே இல்லாத அளவில் சிறப்போடுச் சான்றோர் என்று வளர்ந்து வந்தார்கள். சப்த கன்னிமார்கள் பெற்ற ஏழு பேரும் எல்லா வளங்களும் பெற்று சிறப்பாக ஆண்டு வந்த போது எந்த பலனும் இல்லாதக் கேடுகெட்ட கலியன் உருவாகிப் பூலோகத்தில் வந்து விட்டான்.

கலியனின் காலடி பூவுலகில் பட்டவுடன் பூமியானது தன் நிலை மறந்து கட்டுப்பாடுகளை இழந்தது செல்வச் செழிப்பு பொங்கிய நிலையில் இருந்தும், தானத் தர்மங்கள் தன்னுடைய தரம் இழந்தும் காணப்படுகிறது. முன் யுகத்தில் கையாளப்பட்ட சாஸ்திர நெறிமுறைகளை எல்லாம் கலியன் தவறான வழிக்குப் பயன்படுத்தி விட்டான். கலியனின் தீய எண்ணங்களினால் நல்ல நெறிமுறைகள் எல்லாம் தவறான வழிக்கு பயன்படுத்தப்பட்டன.

தீயச்செயல்களுக்கு பயன்படும்படி நெறிமுறைகளை தனித்தனியாக பிரித்தான். எனவே பூலோகம் அதற்கான நடைமுறைகளை கடந்து சாஸ்திர சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்படாமல் போனது. மக்களும் பாவ வாழ்க்கையில் மூழ்கி போனார்கள். நல்ல உள்ளங்கள் இல்லாமல் போனது. தந்திரத்தையும் மந்திரத்தையும் பயன்படுத்தி மக்கள் மனதை கெடுத்து விட்டான். சப்த கன்னிமார்கள் பெற்ற மக்கள் ஒற்றுமை இல்லாமல் பகைவர்களாக வாழும்படியானது. எதிரிகளாய் ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர். பெண்களும், ஆண்களும் ஒத்துப்போகாமல் அன்பு குறைந்து பிரியும் நிலை ஏற்பட்டது.

பிள்ளைகள் பெற்ற தாய், தகப்பனை மதிக்காமல் மரியாதையின்றி எதிர்த்துப் பேசியது. கணவன் மனைவியின் வசிய மொழிக் கேட்டு மனைவியே தெய்வம் என்று எண்ணி பேசுவான் மனைவி என்ன பேசினாலும் கேட்டுக் கொள்வான். அவள் தான் நல்லவள் என்று சொல்வான். ஆனால் பெற்ற தாய் தகப்பனை நம்ப மாட்டான். பெற்றோர்களைப் பாதுகாப்பது நமதுக் கடமை என்றுக் கருத மாட்டான். தன்னைக் காப்பாற்றும் புண்ணியவான் என்று மதிக்க மாட்டான். இது போன்ற நேர்மையற்றக் காரியங்களைதான் கலி நீசன் செய்து மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கினான்.

எனவே கலியானது தொடர்ந்து காலம் காலமாகப் பெருகியது. நீதி, நியாயம், தர்ம சிந்தனைப் போய் விட்டதால் அநியாய காரியங்கள் பெருகி சிவபெருமான் வீற்றிருக்கும் சிவலோகம் வரை சென்று பரவி நிம்மதியை இழக்கச் செய்தது. இவ்வாறு ஆட்டிப்படைத்த கலியானது கைலாயத்தை விட்டுவைக்காமல் மோதியது. இப்படி நடந்தால் இன்னும் கொஞ்ச நாளில் பெரிய பேரழிவை உண்டாக்கும் ஈஸ்வரரே என்று நந்தீஸ்வரர் சொன்னார்.

ஆகையால் சிவபெருமானே! உலகமானது கலியாகிய இருளிலிருந்து மீள முடியாது. அதை தடுக்க வேண்டுமென்றால் மாயப் பெருமாள் தான் வரவேண்டும். இந்த பச்சை நிற மேனியும் பவளவாய் கனியிதழும் கொண்ட அழகான தங்க திருமாலால் தான் இந்த கலியை அழிக்க முடியும் பெருமானே! என்றார் நந்தீஸ்வரர்.

அதை கேட்ட சிவபெருமான் திருமாலை நான் எங்கு சென்று தேடுவேன். வைகுண்டத்தில் போய் தேடவா? வரம் பெற்ற மாயவரை! சிறந்த ஸ்ரீ ரெங்கநாதரை! பாற்கடலில் தேடவா? பள்ளிக்கொண்ட பெருமானை! பூலோகத்தில் தேடவா? புகழ்பெற்ற புண்ணியனை! நாகம்தனில் துயின்ற மாய பெருமானை நான் எங்குச் சென்று தேடுவேன். அப்பா நந்தி தேவா திருமாலை வரவழைக்க என்ன வழி இருக்கிறது என்று நீ தான் யோசித்து நல்ல முடிவைக் கூறு என்றார்? சிவபெருமான் சொன்னதை கேட்ட நந்திதேவர் சுவாமி! நாடுச் சீர்கேடு அடைந்து தானதர்மங்கள் இல்லாமல் தாழ்வடைந்துவிட்டது. தவத்தின் மூலமாவது வருந்தி வரவழைத்து கொள்ளலாம் என்றாலும் பலனில்லை. பாவச் செயல்கள் தான் எங்கும் நிறைந்துள்ளது. தவமும் நிறைவேறாது.

ஒரே ஒரு வழி தான் இருக்கிறது சுவாமி! கேடுக்கெட்டக் காலமாக இருப்பதால், நன்மைகள் செய்துப் பயன் இல்லை. ஆகையால் வான வெளியில் சென்றால் தான் வெற்றி கிடைக்கும். நல்லக் காரியம் நடக்க வேண்டும் என்றால் தீய வழியில் செல்லும் பேய் படைகள் சூடும் எருக்கம்பூ மாலையை அரம்பையிடம் கொடுத்து அவள் கையால் உங்கள் கழுத்தில் அணிந்து மனதை ஒருநிலைப்படுத்தித் தவம் செய்தால் உடனே மாயப் பெருமாள் வருவார் என்று நந்தீஸ்வரர் சொன்னதும் சிவபெருமான் நிலைதடுமாறி தீய கலியனுக்கு தீயவரத்தை கொடுத்ததால் தானே தீய வழியில் நான் செல்ல வேண்டியதாயிற்று என்று மனதை ஒருநிலைப்படுத்தி நந்தியிடம் கூறுவார்,

மாயவரை வரவழைக்க வழி சொல்லென்று நான் கேட்டதற்கு, பேய் பிறப்பு எடுக்கப் புகன்றாயே சேவகனே! திருநடனம் புரிந்து திருமாலை நான்

அழைப்பேன். ஆகாது என்று எருக்கம் பூமாலையிட்டு என்னை அழைக்க சொல்லுகின்றாய் ,இருந்தாலும் உன் மீது குற்றமில்லை.

பிச்சி மலர் மாலைகள் தெரிகின்ற புன்னகையை காண்பதற்கு பேய் பிறப்புதான் பொருத்தம் என்று பகருகின்றாய். துளசி அணிந்து தூயவரை காண உலகம் அளந்த உத்தமரை வரவழைக்க உன் சொல்லை கேட்ட உடனே விருப்பம் கொண்டேன். அன்பு மலரணியும் அய்யாவை காண எப்பிறவி என்றாலும் எனக்கு இஷ்டமடா! பார்வதியின் சகோதரனை, பச்சைமால் அச்சுதரை பார்க்க எனக்கு ஆசையாக இருக்கிறது. என் மைத்துணரை அழைப்பதற்கு நான் எப்பிறவி என்றாலும் எடுப்பேன் என்று ஈஸ்வரரும் அதற்கு உடன்பட்டு சம்மதித்தார்.

*******

# DAY 15

## பேய்ப்பிறப்பு

அப்போது மாமுனியும் அரனா ரடிவணங்கி
இப்போது தானதவம் இல்லையே லோகமதில்
தவஞ்செய்து மாயவரைத் தான்வருத்த வென்றாலும்
பவஞ்செய்த காலம் படுமோ தவமிருக்க
என்றுரைத்து மாமுனியும் இன்னமொன்று சொல்லிடுவான்
நன்றுநன்று ஈசுரரே நானுரைக்கக் கேட்டருளும்
இருள்கொண்ட காலமதால் ஏற்றதர்மஞ் செல்லாது
மருள்கொண்ட காலமதால் வம்புக்கேநே ராகுமையா
ஆணுவஞ்சேர் பேய்க்கணங்க ரம்பைக்கோர் மாலைதன்னைப்
பூணும்நீர் தவசு புரிந்தா லரிவருவார்
என்று முனிசொல்ல ஈசுரனார் சம்மதித்து
அன்று பேய்க்கணங்க அசுமாலை யையணிந்து
இருந்தா ரரிதான் இப்போவர வேணுமென்று
தருந்தார மார்பன் தானறிந் தேதெனவே
இருக்க வகையில்லாது எழுந்திருந்தா காயமதில்
சுறுக்கா யுதித்துத் தோன்றினார் ஈசர்முன்னே
அப்போது மாயவரை ஆதி யாவிப்பிடித்து
இப்போ திதுவரையும் எங்கேநீர் போனீர்காண்
என்றுதான் ஈசர் எய்த்திளைத்துச் சொல்லிடவே
அன்றுதான் ஈசுரரை அரியாவித் தான்சேர்த்து
பாண்டவர்க் குபகாரம் பண்ணி யிருந்ததுவும்
வீண்டதுரி யோதனனை வெற்றிகொண்ட செய்தியதும்
பொருப்பேறிப் பொய்ச்சடலம் போட்டுஸ்ரீ ரங்கமதில்
இருப்பதுவுஞ் சொல்லி எனைவருத்துவா னேனென்றார்
அப்போ தரனார் ஆதிமா லோடுரைப்பார்
இப்போது கலியன் இராச்சியத்தி லேபிறந்து

பதிநாலு லோகமதும் பாரஇருள் மூடினதால்
இதுநாள் வரையும் யானுமும்மைக் காணாமல்
மனங்கலங்கிப் பேய்க்கணங்க மாலையிட்டு நானிருந்தேன்
கனங்கொண்ட மாயவரே கயிலையிருள் மாற்றுமென்றார்
நல்லா யிருக்குதுகாண் நவின்றதெல்லாங் கேட்பதற்கு
எல்லா மிருக்கட்டென்)று (ஈசுரரே உம்முடைய
கழுத்தில் தரித்ததையும் கழற்றி யெறியுமென்றார்
வழுத்திடவே ஈசர் மாலை தனைக்கழற்றி
கோபத்தா லக்கினியில் குறியா யெறிந்தனரே
வேகத்தால் மாலை வெடித்ததுகாண் பேய்க்கணம்போல்
கொள்ளைகொண்ட பேய்கள் கோடாமுக் கோடியுமாய்த்
துள்ளிக் குதித்துச் சுற்றிக் குதித்தாடும்
அப்போது பேய்கள் அரனா ரடிவணங்கி
இப்போது ஈசுரரே எங்கள்பசி தீர்த்து
மந்திர சாலம் மாய்மால மாரணமும்
தந்திர சாலம் சர்வதுமே தாருமையா
கொல்லச்சாவு சங்கிலியும் கொன்றவரைத் தானெழுப்ப
வெல்லப்பிழை சங்கிலியும் வெடிப்பாக வேதாரும்
ஈசுரரும் தேவர்களும் எங்கபடத் துள்ளாக
வீசுபல வரங்கள் விடையாகத் தாருமையா
அப்போது பேய்கள் அதுகேட்ட தத்தனையும்
இப்போது கொடுக்க ஈசுரருஞ் சம்மதித்து
மாலோடும் வேதா மறையவனோடுங் கேட்பார்
ஆலோசனைபுரிந்துஆதிமனம்மகிழ்ந்து
கேட்டிருந்த நாரணரும் கிருபையுட னீசுரரைத்
தேட்டமுடன் பார்த்துச் செப்புவா ரம்மானை
ஈசுரரே பேய்களுக்கு இவ்வரங்க ளீந்தாக்கால்
வீசுங்காண் லோகமதை விழுங்குங்கா ணிப்பேய்கள்
தூயவரே பேய்கேட்ட சுத்தவர மத்தனையும்
ஞாயமில்லை யென்று நானுரைக்கப் போகாது
ஆனாலும் பேய்களுக்கு அருளினா லிவ்வரங்கள்
ஞானாந்திர மான நாரத மாமுனியை
வருத்தியே பேய்களுக்கு வரங்கொடுத் தவன்கையிலே
இருத்தி யணையவைத்து ஏழ்ப்பியும் பேய்களைத்தான்
பேய்களுட பேரில் பிழைத்ததுதான் குற்றமென்றால்
தேயக்கலி மாளுகையில் சிவவடகை லாசமதில்
முனிசிறையும் பேய்களுக்கு உயிரழிவு மென்றுசொல்லித்
துணிவான முனியுடனே சொல்லி யனுப்புமென்றார்
அப்போது ஈசுரரும் அந்தமுனியை வருத்தி
இப்படியே சொல்லி ஏழ்ப்பித் தனுப்பிடவே
மாமுனியுஞ் சம்மதித்து வரம்வேண்டிப் பேய்களுந்தான்
தாமுனிந்து பூலோகம் தன்னிலே வந்திடுமாம்
பேய்ப்பூ லோகமதில் போயிடவே ஈசுரரும்
ஆயனா ரோடே அருளுவா ரன்போரே
கயிலை யிருளைக் கடத்திவைக் காதிருந்தால்
அகில மதிலிருப்பு அல்லவே அச்சுதரே

அப்போது மாயவனார் ஆதி தனைநோக்கி
இப்போது நீங்கள் எல்லோரு மிக்கவேதாம்
ஒன்றானவேசமொன்றுஎடுக்கவேணுமென்று
நன்றான ஆண்டிகள்போல் நற்றா வடங்களிட்டுப்
பண்டார வேசமதாய்ப் பதிந்திருங்கோ வென்றுசொல்லி
நடந்தார் சீரங்க நகரிதனி லெம்பெருமாள்
மாயனுரை மாறாமல் வாய்த்தமே லோகமுள்ளோர்
ஞாயமுள்ளதேவர்களும் நல்லரிசிமாரும்
வாசமுள்ளகைலை வாய்த்தமேலோகமுள்ளோர்
ஈசர்முத லாண்டியென இருந்தார்கா ணம்மானை
ஆனதால் கலியன் அங்கே யனுவிலகி
மான மனுப்போலே வாழ்ந்திருந்தா ரம்மானை

விளக்கம்:

பேய் பிறப்பு

நந்தீஸ்வரர் சிவபெருமானிடம் கூறியக் கருத்தை கேட்டு, உடனடியாக பேய் படைகளை வரவழைக்கும் அந்த பேய் கண மாலையை அணிந்து கொண்டு, மனதை ஒரே நிலையில் வைத்து தியானித்து கொண்டு திருமாலே! உடனடியாக வரவேண்டும் என்று உருக்கமாக தவம் மேற்கொண்டார். எண்ணியதும் எழுந்து அருள்புரியும் திருமால், திருமகள் நாயகன் , கருமுகில் வண்ணன் , கமலகண்ணன், சிவபெருமான் நினைத்தவுடன் தவத்தை உள்ளுக்குள் உணர்ந்து கொண்டார்.

பின் என்னக் காரணம்? சிவபெருமான் வருந்தி என்னை அழைப்பதற்கு என்று ஓடிவருகிறார். என்னக் காரணமாக இருந்தால் சிவபெருமான் இரங்கி வேண்டுவார் என்றுப் பதற்றத்தோடு ஸ்ரீரங்கம் விட்டுக் கைலை வருகிறார். கைலையில் சிவபெருமானுக்கு, எம்பிரான் காட்சிக் கொடுக்கிறார். திருமாலைக்கண்ட சிவன் பற்றுதலோடு கட்டி அணைத்து ஆரத்தழுவி தாயைப் பிரிந்த கன்று தாயை கண்டாற்ப்போல் திருமாலைக்கண்ட உடன் சிவப்பெருமான் ஆனந்தம் கொண்டார்.

ஆதிப்பரம்பொருளான சிவன், ஆதி அந்தமில்லா ஆதிபரம் பொருளான நாராயண மூர்த்தியை பாசத்தோடு எங்குச் சென்றீர்? எதற்காகச் சென்றீர்? என்றுத் திருமாலிடம் கேள்விகளைக் கேட்டார். ஈஸ்வரரின் உள்ளக்குமுறலைக் கண்ட திருமால், அவர் ஆதங்கத்தை போக்க பரவசமடைந்து அவரை ஆரத்தழுவி, நடந்த விவரத்தை சொல்வார். பூலோகத்தில் வாழ்ந்தப்பாண்டவர்களுக்கு ஏற்பட்டத் துன்பங்களைப் போக்கி துணையாக உதவியதையும், மதம்பிடித்த துரியதனோடு பாரதப்போர் நடத்தி வெற்றிப் பெற்ற செய்தியையும், துவாபர யுகத்தில் அவதாரம் எடுத்த அந்த சூட்சம சசரீரத்தை பர்வதா மலை உச்சியில் போட்டுவிட்டு ஸ்ரீரங்கத்தில் பள்ளிக்கொண்டிருந்த விவரத்தை சொல்லிவிட்டு , என்னை அழைத்த காரணம் என்னவென்றுக் கேட்டார்.

சிவப்பெருமான் நாராயணரிடம் சொல்வார், கருணை கடலே கலியனாகிய நீசன் , பூலோகத்தில் பிறவி எடுத்து உலகங்களைத் தீயச்செயல்களால் ஆட்டிப்படைப்பதால் உலகம் இருள்போல் ஆனது. இருளில் உலகம் மூழ்கிவிடாதபடி தடுக்கவே உங்களை அழைத்தேன். உம்மைக் கண்டுக்கொள்ள முடியாததால், மோசமான கலியின் நிலையை மாற்ற முடியாமல் இருந்து விட்டேன்.

கலியின் தீயச்செயல்களை கண்டு திகைப்படைந்த நான், மனம் குமுறி திகைப்படைந்துப்போய், பேய்கள் சூடும் எருக்கம்பூ மாலையை அணிந்து , உம்மை நினைத்து தவம் இருந்தேன். பெருந்தன்மை கொண்ட மாயபெருமானே! கைலாய மலையின் மோசமான நிலைமை மாற்றிப் புனிதம் அடையச் செய்யும் என்றார். உடனே சிவப்பெருமானிடம் , திருவாய் மலர்ந்து கூறுவார், கேட்பதற்கு வினோதமான செயல்போல் இருக்கிறது.

உமது கழுத்தில் அணிந்திருக்கும் எருக்கம் பூ மாலையைக் கழற்றி எறியும். பார்க்க சகிக்கவில்லை என்றார். உடனே ஈஸ்வரரும் எருக்கம் பூ மாலையை கழற்றி எதிரே இருந்த அக்னிக்குண்டத்தில் எறிந்தார்.எறிந்த வேகத்தில் மாலையானது வெடித்துச் சிதற பேய் படைகள் கணக்கில்லாமல் உருவாகியது.

பேய் படைகள் அந்த இடத்தை ஆக்கிரமித்து. அவை கோடிகணக்கில் தோன்றின. அக்னி குண்டத்தில் தோன்றியப் பேய் படைகள் குதித்து ஆட்டம் ஆடிய சிவபெருமான் பாதங்களை வணங்கியது. ஈஸ்வரரே எங்களுக்கு கோர பசியாக இருக்கிறது. ஆகாரம் வேண்டும் என்று கேட்டது. மேலும் எங்களுக்கு மாயம் செய்ய, மந்திர வித்தைகளையும், கண்ணுக்குத் தெரியாமல் நின்று ஏமாற்றி பித்தலாட்டம் செய்கின்ற வித்தைகளையும் எங்களுக்குத் தர வேண்டும் என்றுக் கேட்டது. மற்றும் எங்களுக்கு மனிதர்களைக் கொல்லும் சக்திகள் அற்புத சக்திப் படைத்த தேவர்களும் கூட எங்களுக்கு அடங்கவும் வரம் தர வேண்டும் என்று கேட்டனர்.

பேய்கள் வேண்டுவதைக் கேட்ட சிவபெருமான் அவர்கள் விரும்பிய அத்தனை வரங்களையும் கொடுக்க எண்ணம் கொண்டு அவருடைய கருத்தை மகா விஷ்ணு ஆகிய திருமாலிடமும், வேதசாஸ்திரத்தில் வல்லவர் ஆகிய பிரம்மாவிடமும் ஆலோசனை கேட்டார். இவ்வாறு சிவன் சொன்னதை கேட்ட நாராயணரும் இரக்கமுள்ள சிவபெருமானும் ஆலோசித்து பேய் படைகள் கேட்ட வரங்களை கொடுத்தால் பேய்கள் உலகமெங்கும் சென்று அழிவை உண்டாக்கி விடும்.

ஆகையால் பேய் கணங்களுக்கு வரங்களை கொடுப்பது நீதி நியாயங்களுக்கு மாறானது என்று நான் சொல்ல முடியாது. காரணம் ஒருவர் கொடுக்க நினைத்ததை மற்றொருவர் தடுப்பது என்பது செய்ய கூடாத காரியம். ஆனால் இதற்கும் ஒரு உபாயம் உண்டு. ஞான முனிவராகிய நாரதரை அழைத்து சில திட்டங்களைச் சொல்லி வாக்குறுதியைப் பெற்றுப் பேய்கணங்களுக்கு வரம் கொடுக்கச் செய்யுங்கள் உயிர்களுக்கு கெடுதல் செய்யாத படி அடங்கி இருக்கச் சக்தியை வாங்கிவிட்டு நாரதரிடம் வரம் கொடுத்து தொழிலை ஒப்படைத்து விடுவோம் என்றுச் சொன்னார்.

சத்தியத்தை மீறித் தவறுகள் செய்து உயிர்களுக்குத் துன்பம் செய்தால் கலியுகம் முடிந்து தர்மயுகம் தோன்றுகின்ற நேரத்தில் சிவபெருமான் அமரும் வடகயிலாயம் அறையில் நாரத முனிவருக்கு சிறைத் தண்டனையும், பேய்களை எரித்தது அழிக்க கூடிய தன்மையும் தண்டனையாக கிடைக்கும். ஆகையால் துன்பங்கள் ஏற்பட்டு விடாது முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நாரத முனிவரிடம் சொல்லி அனுப்பச் சொன்னார். திருமாலின் அறிவுரையை கேட்ட சிவன், திருமால் கூறிய விவரங்களை விவரமாகச் சொல்லி அனுப்பினார்.

சிவபெருமான் சொன்ன கருத்தை நாரதர் பேய்களுக்கு சொன்னதும், பேய்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு வரத்தைப் பெற்று கொண்டன. மேலும் பேய்கள் மனம் நிறைவடையாமல் பூலோகம் போய் விட்டதைக் கண்டு சிவன் வீற்றிருக்கும் கயிலாயம் தோஷம் நீங்க வழிச் சொல்லவில்லையே என்று வருத்தம் கொண்டு உலகத்தை பாதுகாக்கும் திருமாலே, கைலாயத்தில் உடனடியாக கலியின் மாய இருளை அகற்றாமல் இருந்தால் அகில உலகத்திலும் வாழுகின்ற மக்கள் நிம்மதியாக இருக்க முடியாமல் போய்விடுமே என்றார்.

அதுகேட்ட திருமால், சிவபெருமானை பார்த்து அதற்கு நான் ஒரு வழியை கூறுகிறேன், கைலாயத்தில் இருக்கின்ற அனைவரும் நல்ல பண்புள்ள முதிர்ச்சியடைந்தப் பக்குவமான சன்னியாசிகளை போல் ருத்ராட்ச மாலைகளை அணிந்து, காவி உடை உடுத்திக்கொண்டு, சந்நியாசி கோலத்தோடு பணிவாக தங்கியிருங்கள்.

கலியன் முன்னாளில் பண்டாரம் சன்னியாசிகளை துன்புறுத்த மாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்த வாக்குறுதியை நினைவில் கொண்டு சூட்சமமாக சிவனிடம் சொல்லாமல் நாராயணர் மீண்டும் ஸ்ரீரங்கம் சென்றார். மாயப் பெருமாள் கூறிய அறிவுரைகளைக் கேட்டு கைலாயத்தில் உள்ள அனைவரும் வாக்கு மாறாமல் எல்லோரும் தன்னை மாற்றிக் கொண்டார்கள். சிவபெருமான் சடையோடு உலகத்தின் முதல் ஆண்டியாக காணப்பட்டார். எல்லோரும் ஆண்டிகளாகவும் சன்னியாசி உருவ அமைப்பும் கொண்டு இருந்ததைக் கண்டு கலியன் கைலைக்கு அணுக முடியாமல் திரும்பிச் சென்றான்.

கலியன் திரும்பிச் செல்ல காரணம் என்னவென்றால், கலியன் திருமாலிடம் நான் பண்டாரம், ஆண்டி, பரதேசிகளை துன்புறுத்த மாட்டேன் என்றுச் சத்திய வாக்கு கொடுத்தபடி அவனும் அதை நினைத்து அவ்வாறு விலகி சென்றான். எனவே கலியன் கைலாயம் செல்லாததால் அவர்கள் மன நிம்மதியோடு அறம் தவறாமல் நிம்மதியாக இருந்தார்கள்.

********அய்யா உண்டு*******